போன் நெ. 15. விலை 2 அணு. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 16—8—53 | இதழ் 7

ஆச்சாரியாரும்-மனச்சாட்சியும்

[அடிகள்]

★

உன்னுடைய மனச் சாட்சியின் படி நடந்து கொள்.

மனச்சாட்சி மறுக்கும் எந்தக் காரியத்தையும் செய்யாதே.

நீ எவ்வளவு கூறினாலும் என்னுடைய மனச்சாட்சி இடந்தரவில்லை; எனவே, நான் அந்தக் காரியத்தைச் செய்ய மாட்டேன்.

அவன் செய்வது தவறென்று என்மனச் சாட்சி கூறுகிறது.

நான் செய்வது தவறென்று அவனுடைய மனச்சாட்சிக்குப் படுகிறது.

மனச்சாட்சியாகக் கூறுகிறேன், நான் அந்தக் காரியத்தில் ஈடுபடவில்லை என்று.

நீ செய்வதெல்லாம் சரியா என்று உன் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்.

நீ என்னுடைய நண்பனாய் இருந்தும், நான் சொல்வதை நம்பவில்லையென்றால், நான் என்ன செய்ய முடியும்? என்னுடைய மனச்சாட்சியே எனக்குப் போதும்.

✱

மனச்சாட்சி—இந்தச்சொல் அல்லது சொற்றொடர் நம்முடைய நாட்டில்தான் பெரும் அளவில் பயன்படுத்தப்படுகிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது. அதே சமயத்தில் இந்தச் சொற்றொடர் நம்முடைய நாட்டில்தான் மிகமிகப் பெரிய அளவில் அலட்சியப்படுத்துகிறதென்பதும், அது, பயன்படுத்தப்படும் முறையையும் சந்தர்ப்பத்தையும் அவ்வப்போது அனுபவ வாயிலாக அறியவல்லார் எவரும் எந்தக் காரணத்தைக்கொண்டும் மறுக்க முடியாது. நூற்றுக்குதொண்ணூற்றென்பது சம்பவங்களும் மனச்சாட்சியை மதியாமல் நடந்தபோதிலும், அவை, மனச்சாட்சிப்படி நடந்ததாகவே நிலைநாட்ட முயலும் ஒரு பரிதாபகரமான—வெட்கப்படக்கூடிய—வேதனை அளிக்கவல்ல நிலையை இந்நாட்டிலன்றி வேறெங்கும் காணமுடியாது. இங்குதான் எடுத்ததற்கெல்லாம் மனச்சாட்சி இராப்பர்மாதிரி இழுக்கப்படுகிறது. மனச்சாட்சிக்கு மதிப்புத்தர மறுப்பதில் முன்னிற்பதும் இந்த நாடுதான் என்பது மிகையாகாது. அடுப்பங்கரையிலிருந்து ஆட்சிப்பீடம்வரையில் நடக்கும் எந்தச் சம்பவங்களுக்கும் மனச்சாட்சியை வலிய துணைக்கழைத்து மக்களை மயக்கும் திறமை, இந்நாட்டவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது பேருக்குச் சர்வ சாதாரணமாக இருக்கிறதென்பதும் வடிகட்டிய உண்மைகளில் ஒன்று.

மனச்சாட்சி—இதனை எந்தச் சந்தர்ப்பத்தில்—எதற்காக—எவர் பயன்படுத்துவது என்பதனையே அறிய முடியாத அப்பாவிகள்தான் இந்நாட்டை ஆளும் பொறுப்பிலும் இருக்கிறார்களோ என்றெண்ணும்போதுதான், இங்கு, மனச்சாட்சி எவ்வளவு மலிவாக—சலபமாக விற்கவும் வாங்கவும் கூடிய லேவாதேவிப் பொருளாக இருக்கிறதென்பது விளங்குகிறது. ஒரு அரசியல்வாதி, தான், தன்னுடைய மனச்சாட்சியின்படி நாட்டை ஆள்வதாகக் கூறுகிறான். ஒரு ஆண்டவன்வாதி, தான், தன்னுடைய மனச்சாட்சியின்படி கடவுள் இருப்பதாகக் கூறுகிறான். ஒரு பகுத்தறிவுவாதி, தான் தன்னுடைய மனச்சாட்சியின்படி கடவுள் இல்லை என்பதாகக் கூறுகிறான். ஒரு வழக்கறிஞன் (வக்கீல்) தான், தன்னுடைய மனச்சாட்சியின்படி வாதாடுவதாகக் கூறுகிறான். ஒரு நீதிபதி, தான், தன்னுடைய மனச்சாட்சியின்படி தீர்ப்பளிப்பதாகக் கூறுகிறான். ஆனால், நூற்றுக்கு ஒருவர் என்ற பட்டியலில் வரக்கூடிய நீதிபதிமட்டும், தன்னுடைய மனச்சாட்சியையும் மீறித் தீர்ப்புக்கூற வேண்டிய நிலைமைக்கு ஆளாகிவிடுவதும் உண்டு. "இவன் குற்றவாளி அல்ல என்பது என் மனச்சாட்சிக்குத் தெரிந்தபோதிலும், சட்டம் இவனைக் குற்றவாளி என்று ருசுப்படுத்துவதால் இவனுக்குச் சட்டப்படி தண்டனை அளிக்கிறேன்" என்று அந்த நீதிபதி கூறுவதும் உண்டு. ஆனால், இது எல்லாருக்கும் பொருந்துமா? அரசியல்வாதி, ஆண்டவன்வாதி, பகுத்தறிவுவாதி அனைவருமே இந்த முறையைக் கையாளலாமா? கையாள முடியுமா என்பது

சிந்தித்துப் பார்க்கவேண்டிய ஒன்றாகும்.

ஒரு அரசியல்வாதி, எதாவதொரு காரியத்தைத் தன்னுடைய மனச்சாட்சியின்படி செய்ய முயன்றால், அவனை ஒரு பைத்தியக்காரனென்றே, மனச்சாட்சி என்றால் என்ன என்பதனை அறிந்த அனைவரும்கூறுவர். ஏனென்றால், ஒரு அரசியல்வாதி, தன்னுடைய மனதை மட்டும் சாட்சியாக வைத்துக்கொண்டு எந்தக் காரியத்தையும், அதாவது, அரசியல்சம்பந்தப்பட்ட பொதுக்காரியம் எதனையும் செய்துவிடக்கூடாது. அப்படிச் செய்தால், அது, அனைவராலும் ஒப்புக் கொள்ளக் கூடியதாக இருக்க முடியாது. அதிலும் ஒரு ஜனநாயக அரசியல்வாதி தன்னுடையமனச்சாட்சியின் படியே காரியங்களைச் செய்ய முனையவே கூடாது.

மனச்சாட்சி-இது,ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் சொந்தமாய்ப் பயன் படுத்தக்கூடிய ஒன்றே தவிர, பொதுவான காரியங்களில் மனச்சாட்சி தலையிடவே கூடாது.

மனச்சாட்சி—இது, கோயிலுக்குப் போவது தவறான காரியமல்ல என்று நினைக்கிறது. தாராளமாக நினைக்கட்டும்—போகட்டும்.

மனச்சாட்சி—இது நட்ட கல்லைத் தெய்வமென்று கருதிக் காசிவரை போய்க் கால் அலுத்தேன் பராபரமே என்று நினைக்கிறது — பாடுகிறது. தாராளமாக நினைக்கட்டும்—பாடட்டும்.

மனச்சாட்சி—இது, மது நிரம்பிய ஒரு கிண்ணத்தை ஒரு கையிலும், மங்கை தரும் பால் நிரம்பிய ஒரு கிண்ணத்தை இன்னொரு கையிலும் ஏந்திய வண்ணம் இன்ப சாகரத்தில் மூழ்குவதே சிறந்ததென்று கருதுகிறது — தடுப்பாரில்லை.

மனச்சாட்சி—இது, கள் குடிப்பதைக் கனவிலும் நினையாதே—பிற மங்கையரை மனத்தாலும் தொடாதே என்று வற்புறுத்துகிறது—இதனைத் தவறென்று யார் கூற முடியும்?

மனச்சாட்சி—இது, மந்திரியாகலாம் என்று நினைக்கிறது. மந்திரியாவதற்குரிய தகுதிகள் அனைத்தும் தன்னிடம் அமைந்திருப்பதாகவே கருதுகிறது. ஆனால், முடியுமா?

மனச்சாட்சி — இது, மந்திரியாகலாம் என்று மனப்பால் குடிக்கிறதே! மந்திரியாக வேண்டுமானால், மக்களின் ஆதரவு வேண்டாமா என்று கேட்கிறது. இதனைத் தவறென்று கூற முடியுமா?

மனச்சாட்சி—இது எம். எல். ஏ. ஆகவேண்டுமென்று எண்ணுகிறது. அதற்குத் தகுதி தனக்கிருப்பதாகவும் கருதுகிறது. ஆனால், முடியுமா?

மனச்சாட்சி—இது, எம்.எல்.ஏ. ஆகவேண்டுமென்று ஆவலோடு இருக்கும் உன்னை இந்தப் பகுதியிலுள்ள எத்தனை பேர் அறிவார்? உனக்கும் இப்பகுதி மக்களுக்கும் எவ்வளவுகாலத் தொடர்பு உண்டு? எந்தவகையில் அவர்களுடன் தொடர்பு வைத்திருக்கிறாய்? அரசியல் வாழ்வில் உனக்கு எவ்வளவு கால அனுபவம் உண்டு? என்று பல கேள்விகளைக் கேட்கிறது. இதில் குற்றங்குறைகள் காண முடியுமா?

எனவேதான், மனச்சாட்சி, மன்பதையில் நடக்கும் பொது விவகாரங்களுக்குத் தொடர்புபடுத்தி வெற்றி காண முடியாத தனிப்பட்ட ஒன்று என்று கூறுகிறோம். அதிலும் அரசியல்வாதி எந்தக் காரணத்தைக் கொண்டும் தன்னுடைய மனதைச் சாட்சிக்கு அழைத்து பொதுக் காரியங்களைச் சாதிக்க ஒரு போதும் முயலக்கூடாது என்று கூறுகிறோம்.

பல மனச்சாட்சிகள் ஒன்று சேர்ந்து ஒப்புக்கொண்டு கேட்டுக் கொள்ளப்படும் ஒரு காரியத்தைத்தான் ஒரு அரசியல்வாதியும் தன்னுடைய மனச்சாட்சிக்கு ஏற்றதாக ஒப்புக்கொண்டு செய்ய முற்படவேண்டுமே தவிர, தனிப்பட்ட முறையில், தன்னுடைய மனச்சாட்சி ஒன்றை மட்டும் துணையாக வைத்துக்கொண்டு எந்தப் பொதுக் காரியத்தையும் செய்துவிடக் கூடாது. அதுபோன்ற சர்வாதிகாரக் கொடுங்கோல் முறை வேறெதுவும் கிடையாது. அது மிகவும் ஆபத்தான பாதை! அந்தப் பாதையில் ஹிட்லரும், முசோலினியும் சென்றார்கள்! இன்று அவர்கள் எங்கே! அவர்கள் வகுத்தபாதை என்ன ஆயிற்று? அவர்களைப் பின்பற்றி அந்தப் பாதையில் ஒரு ஜனநாயக அரசியல்வாதி செல்லவே கூடாது.

ஆனால், ஹிட்லரையும் முசோலினியையும் ஒருருவாக்கி ஆட்சி முறையை அமைத்துக் கொண்டிருக்கும் ஆச்சாரியாரோ, எதனையும் என் இஷ்டப்படியே செய்வேன், மனச்சாட்சிப்படியே நடப்பேன்! என்று எக்காளமிடுகிறார்.

‘ஒரு அரசியல்வாதி தன்னுடைய மனச்சாட்சிப்படி காரியம் செய்வதானால் மக்களின் வெறுப்பைப் பற்றிக் கவலைப் படக்கூடாது’’

என்று கூறுகிறார். மக்களின் ஆதரவைப் பெற்ற எந்தக் காரியத்தையும் ஒரு அரசியல் தலைவன் செய்யக்கூடாதென்று, சந்தர்ப்பத்தால் மக்களின் ஆதரவைப் பெற்ற ஆச்சாரியார் கூறுகிறார். மக்களால் வெறுக்கப்படும் காரியங்களையே ஒரு ஆட்சித் தலைவன் செய்ய வேண்டுமாம்! அவனுடைய மனச்சாட்சி ஒத்துக்கொண்டால் போதுமாம்! உடனே அதனைச் செய்து முடித்துவிட வேண்டுமென்று கூறுகிறார் குறுக்கு வழியில் ஆட்சிப் பீடத்தை அணுகிய ஆச்சாரியார். அவர் மேலும் கூறுகிறார்,

“ஒரு அரசியல்வாதி மக்களின் ஆதரவு பெற்றவனாய் இருக்க முயற்சித்தால் தோல்வியே அடைவான்”

என்பதாக. வக்கீல்வாதம் புரிந்து பழக்கப்பட்ட ஆச்சாரியார், நேர்மையானமுறையில்—ஜனநாயக முறைப்படி ஆட்சி செய்யவேண்டிய அரசியலில் புகுந்துகொண்டு, ஆளுக்கொரு பேச்சு, இடத்துக்கொரு வாதம் என்ற முறையில் தம்முடைய ‘திறமை’யைக் காட்டப்பார்க்கிறார். ஒரு அரசியல்வாதிக்குப் பொதுமக்களின் ஆதரவிருந்தால், அவன், தான் செய்யும் காரியங்களில் தோல்வியே அடைவான் என்பதாகக்கூறுகிறார். வாதத்துக்குக்கூட ஒப்புக் கொள்ள முடியாத ஒன்றைத் தம்முடைய வக்கீல் வாதத்தால் உண்மையாக்கிவிடலாம் என்று கருதுகிறார் ஒரு அரசியல்வாதியால் செய்யப்படும் எந்த நல்ல காரியமும் பொதுமக்களால் வெறுக்கப்படமாட்டாது. அதுவுமன்றி, நாட்டுக்குத் தேவையான நல்ல காரியங்களையே செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு காரியமாற்றும் ஒரு அரசியல்வாதிக்கு, காட்டுமிராண்டிக் காலத்தைக் கடந்து வந்து, எதனையும் விழிப்புணர்வோடு நோக்கி உண்மையில் நம்

...ட்கொண்டுள்ள இக்காலத்தில், தோல்வி என்பதே ஏற்படாது— ஏற்பட முடியாது. இந்த உண்மையை உணரும் பக்குவத்தை இன்னும் இங்குள்ள மக்கள் அடையவில்லை என்ற நினைப்போடு பேசுகிறார் ஆச்சாரியார்.

சினிமாத் தொழிலுக்குப் பொது மக்களின் ஆதரவு இருக்கவேண்டுமாம். ஆனால், அரசியலை நடத்துவதற்கு மக்களின் ஆதரவே இருக்கக் கூடாதாம். 6—8—53-ல் தென்னிந்திய சினிமா ஸ்டூடியோ சங்கங்களின் ஆதரவில் நடைபெற்ற ஒரு விழாவில் ஆச்சாரியார் இவ்விதம் பேசியுள்ளார்.

"பொதுமக்களின் ஆதரவு இருக்க வேண்டுமென்று நான் முயற்சித்திருந்தால் நாசமடைந்திருப்பேன்"

என்று கூறுகிறார். பொதுமக்களின் ஆதரவு இருக்கவேண்டுமென்று முயற்சித்திருந்தால் ஆச்சாரியார் நாசமடைந்திருப்பாராம். பொது மக்களின் ஆதரவுபெற்ற அரசியல் வாதிகள் நாசமடைவார்கள் என்ற 'உண்மையை' ஆச்சாரியார் எப்படி அறிந்து கொண்டார் என்பதுதான் நமக்குப் புரியவில்லை. ஆனால் ஆச்சாரியார் இவ்விதம் கூறுவதில் ஒரு உண்மையும் இருக்கிறது. எப்படியென்றால், ஆச்சாரியார் போன்ற சர்வாதிகார சந்தர்ப்ப அரசியல் வாதிகள் பொதுமக்களின் ஆதரவை நாடினால், அப்படிப்பட்டவர்கள், நாசமடைவார்கள் என்பதுமட்டும் உறுதி. "எதை வேண்டுமானாலும் என் இஷ்டப்படிதான் செய்வேன். கேட்க யார் இருக்கிறார்கள்" என்ற போக்கில் காரியங்களைச் செய்து கொண்டு போகும் மமதையாளர்கள் எவரும் பொது மக்களால் நாசமடையாமல் தப்பித்துக்கொள்ள முடியாது. எனவே தான் ஆச்சாரியார், தமக்கு, மக்களின் ஆதரவு தேவையில்லை என்று கூறுகிறார். தம்முடைய மனச்சாட்சியின்படிதான் எதனையும் செய்வேன் என்று சல்லடம் கட்டுகிறார்.

மனச்சாட்சி — இது, எந்த அளவுக்கு மதிப்புக்கொடுத்துக்காப்பாற்றப்படவேண்டிய ஒன்று—அதனை எந்தச் சந்தர்ப்பத்தில்—யார்—எப்படி—எதற்காகப் பயன்படுத்துவது என்பதனை அறியமுடியாத ஆச்சாரியார், தாம் மனச்சாட்சியின்படி காரியங்களைச் செய்வதாகவும், தமக்குப் பொதுமக்களின் ஆதரவு தேவையில்லை என்றும் கூச்சமின்றிக் கூறுகிறார்.

தனிப்பட்ட ஒருவரின் மனச்சாட்சியோடு நாணியை ஆள முயல்வதுபோன்ற தான்தோன்றித்தனமான செயல் வேறொன்றுமில்லை. ஜனநாயக ஆட்சியில் தனிப்பட்ட ஒருவரின் மனச்சாட்சி தலையிடவே கூடாது. இந்த உண்மை, 'ஜனநாயகம்' என்றால் என்ன என்பதனை உணரவல்லார்க்கன்றி மற்றெவர்க்கும் எளிதில் புரியாது — புரியவைக்க முயல்வதும் சாத்தியமான காரியமென்று சொல்லிவிடமுடியாது.

எனவே, மனச்சாட்சியின்படிதான் காரியங்களைச் செய்கிறோம் என்று கூறிக்கொண்டு, மனச்சாட்சிக்கே மாணப்பங்கத்தை தயாரிக்கும் மந்திரி ஒருவர் இருக்கிறாரென்றால், அவர்தான் ஆச்சாரியார். இப்படிப் பட்ட ஒருவர் இதற்குமுன் இருந்ததில்லை! இனியும் இருக்கப்போவதில்லை! ஆனால், இப்போது இருக்கிறாரே! இதற்கென்ன பதில் சொல்கிறீரென்று கேட்கிறீர்களா? அப்படி கேட்கும் உங்களுக்கும் மனச்சாட்சி என்ற மதிப்புக்குரிய ஒன்று இருக்கிறதல்லவா! அதனைக் கேளுங்கள்! கட்டாயம் பதில் கிடைக்கும்.

ஒருவன், தன்னுடைய மனச்சாட்சியின்படி எதனையும் செய்துவிடமுடியாது — செய்யலாமென்று முனையவும் கூடாது. மனச்சாட்சி என்றால் என்ன? தான் செய்கின்ற காரியங்களுக்குத் தன்னுடைய மனதைச் சாட்சியாக வைத்துக்கொள்வது, அதாவது, தான் செய்யும் நல்ல காரியம் கெட்ட காரியம் என்ற இரண்டுக்குமே மனம் சாட்சியாக இருப்பதென்பதுதான் இதற்குப் பொருள். அங்ஙனமன்றித் தான் நினைப்பதை எல்லாம் செய்துவிடலாம் என்று நினைப்பது, மனச்சாட்சிக்கு ஒத்துவராத ஒன்றாகும். தான் நினைக்கின்ற காரியம் தன்னால் செய்து முடிக்கக்கூடியதா என்று தன்னுடைய மனச்சாட்சியைக் கேட்டுப் பார்க்கவேண்டும்.

நல்ல காரியம் ஒன்றைச் செய்யத் தூண்டுவதும் மனம்தான். கெட்ட காரியம் ஒன்றைச் செய்யத் தூண்டுவதும் மனம்தான். எனவே, நல்லது கெட்டது என்ற இரண்டுக்குமே மனம் சாட்சியாக வருகின்றது. ஆகையால், மனதைச் சாட்சியாக வைத்து எந்தக் காரியத்தையும் செய்துவிடலாம் என்று நினைப்பது தவறு. ஐம்பெருங் கொடுமைகளை (பஞ்சமா பாதகங்களை)ச் செய்யத் தூண்டுவதும் மனம்தானென்று நினைத்துக்கொண்டு, அதனைச் சாட்சியாக வைத்து, அக்கொடுமைகளை ஒருவன் செய்தால், "ஏதோ அவன் தன்னுடைய மனச்சாட்சியின்படி அந்தக் காரியத்தைச் செய்தான்—அதில் தவறில்லை" என்று யாராவது கூறமுடியுமா?

மதுவிலக்கைக் கொண்டுவந்தார் என்பதற்காக ஆச்சாரியாரைப் பாராட்டும் மக்கள், சின்னஞ் சிறுவர்களின் மதியை மங்கவைக்கும் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால் அதனையும் பாராட்டி வரவேற்பார்கள் என்று எந்த ஏமாளியும் எதிர்பார்க்கமாட்டான். ஆனால், ஆச்சாரியார் எதிர்பார்க்கிறார்! தன்னுடைய திட்டங்களையெல்லாம் நாடு ஏற்றுக்கொள்ளும் என்ற நினைப்பில், ஜனநாயகப் பண்பைக் காற்றில் பறக்கவிட்டுக் காரியங்களைச் செய்துகொண்டு போகிறார். "நல்ல காரியத்தைச் செய்த நீரே, கெட்ட காரியத்தையும் செய்து மக்களின் வெறுப்பை ஏன் தேடிக்கொள்கிறீர்" என்று யாராவது கேட்டால், ஒரு அரசியல்வாதி இப்படிப்பட்ட வாதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று கூறுகிறார்.

"நல்ல காரியங்களைச் செய்து மக்களின் பாராட்டைப் பெற்ற நான், இப்போது வேறு சில (கெட்ட) காரியங்களைச் செய்து மக்களின் வெறுப்பைத் தேடிக்கொள்ளக்கூடாது என்று சில நண்பர்கள் இப்போதுகூட எனக்கு யோசனை சொல்கிறார்கள். இந்த யோசனையை நான் ஏற்கமுடியாது. அரசியல் தொழிலில் உள்ள மற்றவர்களும் இந்த யோசனையை ஏற்கக்கூடாது"

என்று கூறுகிறார். செய்கின்ற காரியம் நல்லதா? கெட்டதா? என்பதல்ல முக்கியம். மக்கள் விரும்புகிறார்களா? வெறுக்கிறார்களா? அதுவும் முக்கியமல்ல. தேவையா? தேவையில்லையா? அதுகூட முக்கியமல்ல பின்னர் எதுதான் முக்கியம்? தான் நினைத்தது, சரியோ தப்போ அதைச் செய்துமுடிப்பதே முக்கி

யம்—அவசியம் என்கிறார், ஆச்சாரியார்.

“மனமே! நீ மட்டும் எனக்குச் சாட்சியாக இருந்தால் போதும். மற்றவர்களைப் பற்றிய கவலை எனக்கில்லை. எந்தக் காரியத்தையும் உன்னைச் சாட்சியாக வைத்துச் செய்து முடித்து விடுகிறேன். எந்த அணுகுண்டும் என்னை அசைத்து விட முடியாது. மனமே! நீயும் நானும் ஒன்று. இனியாரும் என்னை ஏதும் செய்துவிட முடியாது” என்ற இறுமாப்போடு பேசுகிறார்—என் இஷ்டப்படி தான் எதனையும் செய்வேன் என்று மார்தட்டுகிறார் மறையவர்.

தாம் மட்டுமல்ல, வேறு எந்த அரசியல்வாதியும் மக்களின் குரலுக்கு மதிப்புக் கொடுக்கக் கூடாதென்று மமதையோடு உபதேசம் புரிகிறார். பஞ்சாங்க காலமினைப் போடு வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்று மார்பில் இருப்பதைத் தொட்டுப் பார்த்தபடி பேசுகிறார் அந்தப் பூசுரர். பஞ்சாங்கமும் தர்ப்பையும் தரணியில் தாராளமாக நடமாட வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட ஆரம்பக்கல்வித்திட்டத்துக்கு மக்களின் ஆதரவு தேவையில்லையாம்! வியாசரும், பராசரரும், யாக்ஞவல்கியரும் மீண்டும்தோன்றி நாட்டைக்காடாக்கும் கொடுமைக்கு விதை தூவும் திட்டத்தை அமுலாக்க மக்களின் ஆதரவு தேவையில்லையாம்! தம்முடைய மனச்சாட்சி ஒன்றே போதுமாம். மனச்சாட்சியின் மாண்பறியா மறையவர் கூறுகிறார் இவ்விதம். நாமும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம் — அவரும் நாட்டை ஆண்டுகொண்டுதான் இருக்கிறார். மனமே! நீதான் இதற்குச் சாட்சி கூறவேண்டும்.

★

ஏஜண்டுத் தோழர்களுக்கு

பல கடிதங்கள் எழுதியும் பல ஏஜண்டுகள் தங்கள் பாக்கியைச் சரிவர அனுப்பாமல் இருப்பதால், மேலும் பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப முடியாதென்பதை ஏஜண்டுத் தோழர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

மானேஜர்
திராவிட நாடு

★ விளக்கம் தேவை ★

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்துக்கு மெருகு பூசி, அதன் உண்மை வடிவத்தை மறைக்கப் பணியாற்றுபவர்களில், அன்றைய விபீஷணனையும் தோற்கடிக்கும் முறையில் நடந்துகொள்ளும் மந்திரி மாணிக்கவேலரும் ஒருவர்.

புதிய கல்வித் திட்டம் ஒரு பரீட்சார்த்தமான ஏற்பாடே தவிர நிரந்தரமானதல்லவென்று கும்பகோணத்தில் 10—8—53ல் நடைபெற்ற ஆசிரியர் கூட்டத்தில் பேசிய மாணிக்கவேலர், ஜனநாயகம் என்றால் என்ன என்பதற்கும் விளக்கம் கூறியிருக்கிறார்.

“விவாதங்களின் மூலம் சர்க்கார் நடைபெறுவதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை”

என்பது அவருடைய கருத்து. இதில் விசேஷம் இருக்கிறதென்பதை நாமும் ஒப்புக்கொள்கிறோம். எந்தக் காரியத்தையும் விவாதித்து முடிவு செய்த பின்னரே அமுலாக்கவேண்டுமென்ற ஜனநாயகக் கொள்கையை யாரும் தவறென்று கூறமுடியாது. ஆனால், மந்திரி மாணிக்கவேலரால் ஆதரிக்கப்படும் ஆரம்பக் கல்வித் திட்டம் எந்த விவாதத்தின்பேரில் முடிவு செய்யப்பட்டு அமுலாக்கப்பட்டதென்பதை அவர் சிறிது விளக்கிக் கூற முடியுமா என்று கேட்கிறோம்.

ஜனநாயகத்தின் அடிப்படையை அறிய, ஆங்கிலநாடுவரை சென்று எட்டாம் எட்வர்ட் மன்னர் பட்டம் துறந்தபோது உண்டான அமைதியை மேற்கோள் காட்டிப் பேசும் மந்திரியார், இங்கு, அமைதியான முறையில், சட்டவரம்புக்கு உட்பட்டுப், புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து அறப்போர் புரிவதைச் சட்ட விரோதமானதென்று கூறுமளவுக்குத் ‘திறமை” பெற்றிருப்பது விசித்திரமாக இருக்கிறது.

சட்டத்தை மீறாமல் செய்யும் ‘சத்யாக்கிரகம்’ எப்படிப்பட்டதென்பதை அவர் விளக்கிக் காட்ட முடியுமா?

அமைதியாகச் சென்று, அமைச்சர் வீட்டுமுன் நின்று, ‘புதிய கல்வித் திட்டத்தைக் கைவிடுங்கள்’ என்று கேட்பது, சட்டத்தை மீறாமல் செய்யும் சத்யாக்கிரகமா? அல்லது, யாரோ ஒருவருடைய கடைக்குள் புகுந்து, அங்கிருக்கும் துணியை எடுத்துவந்து தெருவில் கொளுத்திப்போடுவது, சட்டத்தை மீறாமல் செய்யும் சத்யாக்கிரகமா? எது சட்டத்தை மீறாமல் செய்யப்படும் சத்யாக்கிரகம்?

ஜனநாயகத்தின் மாண்பை விளக்கும் மாணிக்கவேலர் அவர்களே! ஆச்சாரியாரின் கல்வித்திட்டம் ஜனநாயக அடிப்படையில் கொண்டுவரப்பட்டதல்ல என்பது ஒருபுறம் இருக்கட்டும். அதில் ஜனநாயக வாடையாவது வீசுகிறதா என்று சிறிது கவனித்துப் பார்க்கக் கூடாதா?

இப்படி ஒரு கல்வித்திட்டம் அமுலுக்கு வரும் என்று மற்றவர்களுக்குத் தெரியாவிட்டாலும் — தெரிவிக்காவிட்டாலும், நாம் அவ்வளவாகக் கவலைப்படமாட்டோம். ஆனால், அது. ஆச்சாரியாரின் சகாக்களான மாணிக்கவேலர் போன்ற மந்திரிகளுக்கோ, சட்டசபை உறுப்பினர்களுக்கோ அல்லது இந்த ஜனநாயக ஆட்சியை அமைப்பதற்கு அரும்பாடுபட்ட காங்கிரஸ் கட்சிக்கோ தெரியுமா? தெரிவிக்கப்பட்டதா? பதில்கூற முடியுமா?

ஜனநாயகத்துக்கு ஒரு சிறிதும் மதிப்புக் கொடுக்காமல் கொண்டுவரப்பட்ட புதிய கல்வித் திட்டத்தை ஒரு பெரிய சீர்திருத்தம் என்று வேறு பேசுகிறார். அதற்குச் சாட்சியாக ஏசுநாதரை அழைக்கிறார். ஏசுநாதர் போன்ற சீர்திருத்த வாதிகளுக்கு எதிர்ப்பு இருந்த போதிலும், அவர்களின் சீர்திருத்தங்களை உள்ளபடியே ஆதரிப்பவர்களும் இருந்திருக்கிறார்கள். ஆச்சாரியார் இலஞ்சம் கொடுத்து வாங்கிய மாணிக்க வேலர்களைப் போன்ற ஆதரவாளர்கள், அன்றைய சீர்திருத்த வாதிகளுக்கு இருந்ததில்லை என்பதை, ஏசுநாதரைச் சாட்சிக்கிழுந்து ஆச்சாரியாருக்கு ஆதரவு திரட்ட முன்வந்து முனைந்து வேலை செய்யும் மந்திரி மாணிக்க வேலரின் கவனத்துக் கொண்டுவர விரும்புவதுடன், ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டத்தில் பொதிந்து கிடக்கும் சீர்திருத்தத்தின் புள்ளி விவரங்களையும் அன்புகூர்ந்து விளக்கும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

நீதிமன்றத்தில் தி. மு. க. குரல்

ஐவர் வழக்கில்—வாக்குமூலம்

[11-ந்தேதி யன்று சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் முன்பு, தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை, செயலாளர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், செயற்குழு உறுப்பினர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன் ஆகியோர், தம்மீது சாட்டப்பட்ட குற்றங்களை மறுத்து, வாக்குமூலங்கள் அளித்தனர் வாக்குமூலங்கள் ஆங்கிலத்தில், தரவேண்டியிருந்தது. அந்த வாக்குமூலங்களில். கீழேயிருப்பது, பொதுச்செயலாளர் ஆங்கிலத்தில் தந்ததை. தமிழ்ப்படுத்திய வாக்குமூலம். தொடர்ந்து, தோழர் மதியழகன் வாக்குமூலமும், வெளியிட்டுள்ளோம். தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத் நடராசன் ஆகியோரது வாக்குமூலங்கள், அடுத்தஇதழில், வரும்—(ஆர்)]

*

சி. என். எ. வாக்குமூலம்

இந்த வாக்குமூலத்தைப் பதிவு செய்யும்படியான சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம், என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுக்கவோ — வாதிடவோ, அல்ல, நான் விரும்புவது. தங்களது நீதியுணர்ச்சியிலும், நேர்மை எண்ணத்திலும் முழு நம்பிக்கைவைத்திருக்கும் நான், எங்கள்மீது சுமத்தப்பட்டுள்ள பலவிதமான குற்றச்சாட்டுகளுக்குக் காரணமான—இயற்கையானதும்; உண்டாக்கப்பட்டதுமான சூழ்நிலைகளை—விளக்க விரும்புகிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில் இந்த வழக்கு ஒரு சாதாரண சம்பவமல்ல; நாங்கள் ஈடுபட்டிருக்கும் இயக்கத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் சம்பவமாகும். எனவே, விரிவாகவும், விளக்கமாகவும், இந்த வாக்குமூலம் இருக்க வேண்டியிருக்கிறது.

இந்த வழக்கு சம்பந்தமான சில முக்கிய அம்சங்களை — மேன்மை தங்கிய நீதிபதி அவர்களே! — உங்கள் முன்வைக்க, அனுமதியுங்கள். பலதரப்பட்ட குற்றங்களில் ஈடுபட்டதாக, குற்றம் சாட்டப்பட்டுள்ளோம் — சட்ட மொழியிலே கூறவேண்டுமானால், சில குறிப்பிட்ட குற்றங்களைச் செய்யத்தூண்டினோம், என்று இங்கே நிறுத்தப்பட்டிருக்கிறோம்.

குற்றம் சாட்டப்பட்டவன், தன்னுடைய சூழ்நிலைகளையும் சுற்றுச் சார்புகளையும—தண்டனையிலிருந்து தப்புவதற்காக, அல்ல; நீதிமன்றத்தின் முன்பும் அதன்மூலம் மக்கள் மன்றத்துக்கும்—விளக்கி, விவகாரங்களின் உண்மை நிலையை உணர்த்துவதற்கு, சட்ட ஏடுகளில் இடமுண்டா என்பது எனக்குத் தெரியாது—ஏனெனில், சட்டஏடுகளைக் கற்றவனல்ல!—ஆனால், நீதிஏடுகளில் நிரம்ப இடமுண்டு என்று உறுதியாக நம்புகிறேன்.

சர்க்கார் தரப்பு முதல் சாட்சி கூறியபடி, லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருப்பதும், சிற்றூர்களிலும் பேரூர்களிலும் ஏராளமான கிளைகளுடன் தமிழகமெங்கும் பரவியிருப்பதுமான, ஜனநாயக அமைப்பு-திராவிட முன்னேற்றக் கழகம். அதன் பொதுச்செயலாளன், நான். மற்ற நால்வரும், அதனுடன் நெருங்கிய தொடர்புகொண்டு, எனக்குத் துணை நிற்கும், தோழர்கள்.

எந்த இயக்கமும் பெறமுடியாத செல்வாக்கும், சிறப்பும் பெற்று விளங்குகிறது, திராவிட முன்னேற்றக் கழகம். நேரமும் சந்தர்ப்பமும் கிடைத்தால், ஜனநாயக முறைகளுக்குட்பட்டு, ஆளும் கட்சியை அகற்றி, ஆட்சிப்பொறுப்பை ஏற்கக்கூடிய வலிமையும் வாய்ப்பும் பெற்ற உன்னதமான அமைப்பாகும். இதனை, நான் குறிப்பிடுவது—திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிய விரிவான விளக்கத்தைத் தருவதற்காக அல்ல; தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் எத்தகைய மகத்தான பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளோம் என்பதை எடுத்துக்காட்டவேயாகும்.

ஆயினும், இங்கே, நிறுத்தப்பட்டிருக்கிறோம் — 'குற்றம் செய்யத் தூண்டினோம்', என்பதாக.

வழக்கு, எங்கள்மீதுதான் என்றாலும், எங்களுக்கும் தி. மு. கவுக்கும் இருக்கும் தொடர்பு காரணமாக, இந்த வழக்கின் விளைவுகள் எங்களை மட்டுமல்ல — தி. மு. கவையும் பாதிக்கும். எனவே, உங்கள் முன்னிலையில், எல்லா விபரங்களையும் கூற, விரும்புகிறேன். சட்டத்தின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள அல்ல — திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருப்பெயருக்கு மாசு ஏற்படாமலிருப்பதற்காக.

திராவிட முன்னேற்றக் கழகம்—திராவிட நாட்டின் விடுதலைக்குப் பாடுபடுவதாகும். ஆந்திரம், கன்னடம், கேரளம், தமிழகம் ஆகிய மொழிவாரிப் பிரதேசங்களைக் கொண்ட, 'திராவிட நாடு' எனும் சுதந்திரத் தனி அரசை ஏற்படுத்தி, உலகநாடுகளின் மத்தியில் உன்னதமான நிலையில் திகழும்படிச் செய்ய வேண்டுமெனும், உயர்ந்த லட்சியத்தைக் கொண்டதாகும். இந்த உயர்ந்த லட்சியத்துக்காக, இலட்சக்கணக்கான திராவிட மக்கள், தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்கள் வழங்கும, வலிவையும் சக்தியையும் கொண்டு, நாங்கள் ஐவரும், பாடுபட்டு வருகிறோம்.

வடநாட்டு ஆதிக்கப் பிடியிலிருந்து, எங்கள் தாயகத்தை மீட்கும் உன்னத நோக்கமே — எங்க

ளுடைய அரசியல் லட்சியம். இந்த உயரிய லட்சியத்துக்காக, எங்களை அர்ப்பணித்துவிட்டோம். எது நேரினும், இதற்காகவே பாடுபடுவோம். வீம்புக்காக அல்ல, மனித வரலாற்றின் சுவைமிகுந்த அத்தியாயமாகிய, சுதந்திரப் போராட்டத்தில், ஈடுபட்ட எல்லோருக்கும் எத்தகைய மனோவேகம் இருந்ததோ, அத்தகைய மனோவேகத்துடன்.

தி. மு. க. வின், நோக்கம் கண்ணியமானது. நோக்கமட்டுமல்ல, அதை அடைய வகுக்கப்படும் வழிமுறைகளும் கண்ணியமானவைகளேயாகும்.

சொல்லாலோ, செயலாலோ பலாத்காரத்துக்கு இடமளிக்காத வகையில், அமைதியான — சட்டவரம்புக்குட்பட்ட — கண்ணியமான முறையில பணிபுரிவதே தி. மு. க. வின் திட்டமாகும் என்பதை, சர்க்கார் தரப்பு சாட்சியங்களும், அவர்கள் சமர்ப்பித்த ஆதாரங்களும், தெள்ளத் தெளிவாக்கி இருக்கின்றன. உணர்ச்சியும் ஆர்வமும் நிரம்பிய அறப்போராட்டங்களின்போதுகூட, அமைதி—கண்ணியம் கட்டுப்பாடு என்பதே, எங்களது மூலாதார முழக்கமாகும்.

அரசியல் துறையில் மட்டுமல்ல, சமுதாயத்துறையிலும், ஜாதி வகுப்பு பேதங்கள் ஒழிக்கப்பட்டு, சமுதாயத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கூறும் நாங்கள், அமைதி கெடா வகையிலும், கண்ணியத்தோடும், பணியாற்றி வருகிறோம். இவ்வண்ணமே, பொருளாதாரத்துறையிலும், பணி புரிந்து வருகிறோம்.

தி. மு. க. வின் வரலாற்றைப் பார்த்தால், உள்ளத் தூய்மையோடும் கண்ணியத்தோடும் அது பணிபுரிந்து வருவது விளங்கும். இந்த உண்மையை தெள்ளத் தெளிவாக விளக்கிய சர்க்கார் தரப்புக்கு, என்னுடைய நன்றி.

பலாத்காரம் மனிதப் பண்புக்கு ஏற்றதல்ல; ஜனநாயகத்துக்கு சாவு மணி அடிப்பதாகும், என்பதே எமது கருத்தாகும்.

வகுப்பு வேற்றுமையையோ, மனமாச்சரியத்தையோ உண்டுபண்ண, என்றும் நாங்கள், எண்ணியதில்லை. இன்னும் சொல்லவேண்டுமானால், தாயகத்தின் விடுதலைக்குப் பணிபுரியுமாறு, பார்ப்பனர் உள்பட எல்லா வகுப்பினரையும், இருகையேந்தி வரவேற்றிருக்கிறோம்.

எப்படி, இந்தளவு அமைதியும் சாந்தமும் ஏற்படுத்த முடிந்தது என்பதை எண்ணினால், எங்களுக்கே வியப்பாயிருக்கிறது.

ஏனெனில், நாட்டிலே திராவிட சமுதாயத்துக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளும் அக்கிரமங்களும் யாரையும் எளிதிலே ஆத்திரமூட்டக்கூடியனவாகவே உள்ளன. நாடாண்ட சமுதாயம், இன்று, நாலாம் ஜாதி, ஐந்தாம் ஜாதி என்று இழிநிலையில் வைக்கப்பட்டு பாழ்படுத்தப்படுகிறது. பண்புகள் பரிகசிக்கப்பட்டு, நிலைகுலைக்கப்பட்டு, திராவிட சமுதாயம் சீர்குலைக்கப்பட்டு வருகிறது. அரசியல் துறையிலே அடிமைகளாக்கப்பட்டு, திராவிடர்கள், அவதிக்காளாக்கப்படுகின்றனர். பொருளாதாரத் துறையிலே திராவிடப் பெருங்குடி மக்கள் தரித்திரர்களாக நலிகிறார்கள். சொந்த நாட்டினின்றும் துரத்தியடிக்கப்பட்டு, ஒரு கவளம் சோற்றுக்காக, வேற்று நாடுகள்சென்று, மானமிழந்து, மரியாதை இழந்து, அந்த நாடுகளின் அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டு, அவதியுறுகிறார்கள். இந்தக் கொடுமைகளை நிரந்தரமாக்கிவிடும் பயங்கர முயற்சியும் இடைவிடாது, நடைபெறுகிறது. இந்த நிலையில் திராவிட மக்கள் தங்கள் இழிநிலையைப் போக்கிக்கொள்ள — அக்கிரமத்தை அழித்தொழிக்க — சட்டங்களை மீறியும், பலாத்காரத்திலீடுபட்டும், செயல் பல புரியாதபடி தடுத்து நிறுத்தி, அமைதியும் அறிவும் கொண்டதும், கண்ணியமும் கட்டுப்பாடும் நிரம்பியதும், சட்டத்தின் மாண்பை மதிப்பதும் ஆன நடவடிக்கைகளில் திராவிட முன்னேற்றக் கழகம், ஈடுபடச் செய்து வருகிறது. ஏனென்றால், சட்டத்தின் மாண்பை மதிப்பது—கோழைத்தனமல்ல, என்று, தி. மு. க. மனதார நம்புகிறது. இப்படிப்பட்டதுதான் எங்கள் வரலாறு — இருந்தும், நாங்கள், சட்டத்தை மீறியவர்களென்று குற்றஞ்சாட்டப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறோம்!

நாங்கள், சட்டத்தை மதிப்பவர்கள்; மரியாதை செலுத்துபவர்கள், சட்டத்தின் நோக்கத்தையும், பொறுப்பையும் உணர்ந்து போற்றுபவர்கள்.

சட்டம்—நீதியைக் குறிக்கோளாகக்கொண்டு மக்களிடையே அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட நாகரீக அறிவு தந்த சாதனம். ஆள்வோருக்கும் - ஆளப்படுவோருக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட ஓர் புனித ஒப்பந்தம்—சட்டம். ஆளப்படுவோரின் நலன் கருதி ஆள்வோரும்; நீதி, மனித உரிமைகளுக்குக் கட்டுப்பட்டு ஆளப்படுவோரும், சட்டத்துக்குக் கீழ்ப்படியவேண்டும்.

நான் சட்டத்தைப்பற்றிய நுணுக்கங்களிலோ — புதிய விளக்கங்களிலோ — ஈடுபட விரும்பவில்லை. ஆனால், சட்டம், தன் இடமாறாது தன் பெருமை குன்றாது இருக்க வேண்டுமானால், ஆள்வோர் அல்லது ஆளப்படுவோர் இவர்களில் எவருமே, மீறக்கூடாது. அப்படி இருந்தால்தான், சட்டம் கோலோச்சமுடியும்— சகலரும் சென்று பூஜிப்பர். பூஜைக்குரிய 'தெய்வத்தை' பக்தர்களின் மனதில் அச்சத்தை உண்டுபண்ண அர்ச்சகன் பயன்படுத்தினால், ஆலயம் வெறுங்கோயிலாகிவிடும்! பக்தர்கள் பாதை மாறிட நேரும்!! .

நீதி! அமைதி! ஒழுங்கு!—இவைகளை நிலைநாட்டுவதே, சட்டம். இதனை மறந்து, ஆட்சிபீடம் அமர்ந்தோர், தங்கள் ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டு, தன்னிலை மறந்து, மக்களின் மன அமைதியைக் கெடுத்து, நீதியைக் கேலிக் கூத்தாக்கினால்— தங்களது ஜனநாயக உரிமைகளைக் காத்துக்கொள்ள அறப்போர் துவங்கும்படியான நிலைக்கு ஆளாகும்போது, ஆட்சியிலே அமர்ந்திருக்கும் அரசாங்கம், சட்டத்தை நீட்டி, 'சட்டம், சட்டம்' என்று பேசினால், அது, 'சைத்தான், தன் சவுகரியத்துக்காக சாத்திரத்தைக் காட்டுகிறது', என்னும் பழமொழியைத்தானே, நினைப்பூட்டும்.

ஆட்சியிலிருக்கும் ஒரு கட்சி, நாட்டின் அமைதியைக் கெடுத்து, நீதியைச் சாய்த்து, இஷ்டம்போல் நடக்கிறதென்றால், நாட்டின் சட்டத்தைத் தொடவும் அருகதை

...ற்றுவிடுகிறதென்பதே, என்னுடைய எண்ணமாகும்.

சட்டத்துக்கு மதிப்பளிக்காத சர்க்கார், விடுதலை விரும்பிகளை வீழ்த்த, சட்டத்தைத் தடியாகக் கருதி அதை எடுத்து வீச முயன்றால், அதை அனுமதிக்கக்கூடாது.

இவ்விதம் நான் கூறுவதால், சட்ட வரம்பு மீறிய செயல்களை ஆதரிப்பதாக அர்த்தமல்ல—தி. மு. க.வைப்போன்ற பொறுப்புவாய்ந்த இயக்கம், இதுபோன்ற நிலைமைகளை ஒருபோதும் சகிக்காது.

சட்டத்தை மீறுதல் குற்றம். ஆனால், சட்டத்தை மீறுவோர், இருக்கிறார்கள். சிலர், தமது சுயநல ஆசைகளுக்காக சட்டத்தை மீறுகிறார்கள் — அங்ஙனம் செய்துவிட்டு, 'எப்படித் தப்பலாம்' என்று முயற்சிப்பார்கள். இவர்கள், சமுதாயக்கானான்கள் — இவர்களால், ஜனநாயகம் ஆபத்துக்கு ஆளாகும்.

ஆனால், உன்னத நோக்கத்துக்காகப் பாடுபட்டும் 'சட்டத்தை மீறியோர்' எனும் குற்றம் சாட்டப்பட்டு கொண்டுவந்து நிறுத்தப்படுவோரும் இருக்கிறார்கள். விடுதலைப் போர் எனும் புனிதப் பணியிலீடுபட்டிருக்கும் அவர்களது உரிமைப் பாதையில் கொடுங்கோலர்கள், சட்டத்தை வீசியோ—வீசாமலோ—தடைகளைப் போடுகிறார்களென்றால் அந்தத் தடைகளை விடுதலைவிரும்பிகள், பொருட்படுத்தமாட்டார்கள். அமைதியோடு தங்கள் பணியைச் செய்வார்கள் — அதனால் வரும் விளைவுகள் அத்தனையையும், ஆனந்தமாகத் தாங்கிக்கொள்வார்கள். அவர்களது இலட்சியம் எவ்வளவுக்கெவ்வளவு உன்னதமாயிருக்குமோ, அவ்வளவுக்கவ்வளவு கொடுமையும் அதிகமாயிருக்கும். அவர்கள் யாவரும், நீதிமன்றத்தின் முன், நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படி நின்றவர்களில் ஒருவர்தான், இன்றைய முதலமைச்சர்! அத்தகையவர்களை 'சட்டத்தை மதிக்காதோர்' என்று, என்றும் கருதப்படுவதில்லை. சாதாரணமாக சட்டத்தை மதியாதவனுக்கும், இத்தகைய ஒரு புனித லட்சியத்துக்காக சட்டத்தை மீறுபவர்களுக்கும் இடையில், குறிப்பிடத் தகுந்த வித்தியாசம் உண்டு. ஆனால், நீதிமன்றத்தில், இந்த இரு பிரிவினரிடையிலும், ஏற்றத் தாழ்வு, காட்டப்படுவதில்லை—சட்டப்படி, இருவகையினரும், குற்றவாளிகள்தான்! ஆனால், சரித்திரம், இதனை மாற்றியிருக்கிறது. நேற்று சட்டத்தை மீறியோர்தான், இன்று சட்டத்தைச் செய்கிறார்கள். நான், இவ்விதம், கூறுவதால், என்னைப்பற்றித் தவறாக எண்ணாதீர்கள். சுயராஜ்யப் போராட்டத்தில் பங்குகொண்ட—அந்த வீரர்களுக்கு, தியாகிகளுக்கு, சமமானவன் என்று நான், என்னைச் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால், அவர்களுடைய குழுவில் நானும் சேர்க்கப்பட்டுவிட்டதாக உணர்கிறேன்! மகிழ்கிறேன்!! தாயகத்துக்காகவும், என் இலட்சியத்துக்காகவும், நான் செலுத்தவேண்டியதை, செலுத்தவேண்டியவனாகிவிட்டேன்.

நான், எந்தக் குற்றங்களுக்காக இங்கே, நிறுத்தப்பட்டுள்ளேன்?

நான், சில குற்றங்களைச் செய்யுமாறு தூண்டினேன்—இதனை நிரூபிக்க, ஆதாரங்களைத் தேடியும், சாட்சியங்களைக் கொண்டுவந்தும், சர்க்கார்தரப்பினர் மிகுந்தபிரயாசை எடுத்துக் கொண்டார்கள். தி. மு. க. செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்—சென்னை தி. மு. க. மாநாட்டில் நான் பேசியதில் ஒரு பகுதி—'நம் நாடு' இதழில் வெளிவந்த சில அறிக்கைகள்; கட்டுரைகள், ஆதாரங்களாகக் காட்டப்பட்டன. இவைகளில் எதையும் நான் மறுக்கவில்லை. உண்மையில் அவைகள், இவ்வளவு உணர்ச்சியூட்டக்கூடியதாகவிருந்தது கண்டு, வியப்புறுகிறேன்! அவைகளின் விளைவால், சுமார் 5000-க்கு மேற்பட்ட என் தோழர்கள் சிறைக்குள்—ஒரு வீரத் தோழர் தன்னுடைய கரங்களில் ஒன்றை இழந்தார்—இன்னொருவர், தன் 'பங்கு'க்கு கால் ஒன்றைப் பறிகொடுத்தார்—ஆறு உயிர்கள், ஜூலை 15-ந்தேதி, போய்விட்டன!

அடக்குமுறைத் தீயைக்கண்டும் ஆயிரக் கணக்கான வாலிபர்களும் பெண்களும் தயாராகயிருக்கிறார்கள் என்பதொன்றே போதும்—எந்த இலட்சியத்துக்காகப் பாடுபட்டு வருகிறோமோ, அந்த இலட்சியத்துக்கு மக்களின் 'ஆசி' கிடைத்துவிட்டது என்பதை விளக்க — அதிகாரமோகிகளால், அந்த 'ஆர்வத்தை' புறக்கணித்துவிட முடியாது — இங்கே, எத்தகைய தீர்ப்பு வழங்கப்பட்டாலும் சரி, 'அதனை' அணைத்துவிட முடியாது.

முதலமைச்சரின் மாளிகைக்கு முன், மறியல் செய்யச் சொன்னது ஒரு குற்றம்!—சத்யாக்கிரக முறைக்குத் தன்னுடைய சீடர்கள் வழங்கும் மரியாதையைக் கேட்டால், கல்லறையிலிருக்கும் காந்தியார், திடுக்கிட்டுக் கலங்குவார்.

என்னுடைய தோழர்கள் மீது, 'மறியல் செய்ததாக' குற்றம் சாட்டாமல், லைசென்ஸில்லாமல் ஊர்வலம் நடத்தியதாகவும், சட்ட வரம்பை மீறியவகையில் கூடியதாகவும், இது போன்ற குற்றங்களைச் சுமத்தியிருப்பதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். மன்றமுகமாக தாக்குவது விவேகமல்ல. ஆட்சியிலிருப்போர், எதிர்க்கட்சியினரை இவ்வளவு கொடுமையாகவா, நடத்துவது?

தி. மு. க. அதனை ஏற்றுக்கொள்ளும்! அதற்குப் பலம் உண்டு — இலட்சியத்தில் உறுதியுண்டு.

நீதிபதி அவர்களே! மக்களின் கோரிக்கைகளை — விருப்பங்களை — ஆட்சியாளருக்குத் தெரிவிக்க, ஜனநாயகமுறையில் என்னென்ன வழிகளுண்டோ, அத்தனையும் தி.மு.க. செய்து பார்த்தது. சிறு புன்னகை — கொஞ்சம் தலையசைப்பு — எதுவும் கிடைக்கவில்லை, ஆட்சியாளரிடமிருந்து. கற்சிலைப்போல் வாய்திறவாது, மக்கள் குரலைப் பார்த்துக் கேலி செய்துகொண்டிருந்தார்கள். எல்லாவழிகளும் முடிந்துபோய்விட்டது—எல்லா கதவுகளும் மூடப்பட்டுவிட்டன—மக்கள் குரல் வலுக்க, வலுக்க கதவுகள் பலமாக மூடப்பட்டன. ஏனிந்த சர்க்கார், ஜனநாயக வழிகளை அவமதித்து, மக்களைக்காண மருண்டு, கொடுங்கோலர்போல் நடந்துகொண்டது என்று இன்னும் எனக்கு விளங்கவில்லை. இவ்வளவு வழிகளையும் செய்துபார்த்தும் பலன் காண முடியாத தி. மு. க. வேறு வழிகளைக் காணத்தானே வேண்டும்? எங்களுக்கு பஸ்லுல்லா ரோடுமீது மட்டும் மோகமா! எங்களது குறைகளை—மக்களது குறைகளை—முதலமைச்சரிடம் போய்த் தெரிவிக்க அவருடைய இல்லத்துக்கு போனாலும்

(10-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்கு முறை!!

திராவிடநாடு

காஞ்சி] 16—8—53 [ஞாயிறு

பதினைந்து

★

15—ஒரு மாதம், ஓடிவிட்டது.

கரமிழந்தோர், காலிழந்தோர், உடல் துளைக்கப்பட்டோர்—அதோ! காட்சி தருகிறார்கள்.

ஆறு குடும்பங்களில், குண்டு கோரத்தால், எழும்பிய அழுகுரல் ஓயவில்லை ஆயிரமாயிரம் தோழர்கள், அதோ! சிறைக்குள், பவனி வந்துகொண்டுள்ளனர்.

தடியடியும், துப்பாக்கித் தழும்புகளும் தாங்கிய தோழர்கள் பலரை, சிறை அழைத்தபடி இருக்கிறது.

வேதனை, படருகிறது! — விசித்திரத் தர்பார் முடிவுபெறவில்லை!!

ஜூலை 15, தாயக மண்ணுக்காக விடுதலைக் கொடி ஏந்திய வீரர்களை வீழ்த்தி, நாட்டை இரத்தக் காடாக்கி, சிறைக்கூடங்களில் சிந்தனைச் செல்வங்களைப் பூட்டிச் சித்திரவதை செய்யும் சர்க்கார்,

ஆகஸ்டு 15ஐ கொண்டாடுகிறது! கொடி ஏற்றல்—குதூகலப் பண்—பிரசங்கமாரி—வானொலி கீதத்தோடு.

சுதந்திரம் அரும்பி, ஆறாண்டுகள் முடிந்துவிட்டதாம்!—அந்த 'ஆகஸ்டு 15ஐ, அன்போடு வரவேற்ற மக்கள் — ஆனந்த வாழ்வு உதயமாகிவிட்டது என்று குதூகலித்த மக்கள்—இன்று, அதன் குண்டுகளால் துளைக்கப்பட்டும், அக்கிரமத்தால் தாக்குண்டும் ஐயோ! என்றலறுகிறார்கள்.

ஆனால், ஆகஸ்டு 15ஐக் கொண்டாடுகிறது, அரசாங்கம்.

இல்லங்களில் ஒளியில்லை! அவருள்ளத்திலும் அமைதியில்லை! இன்பமில்லை – துன்ப இருள், எங்கும். துரைமகனார் ஆட்சி ஒழிந்தது என்று, ஆறாண்டுகளுக்குமுன், ஆனந்தமடைந்த மக்கள், இன்று துடிக்கிறார்கள்! கதறுகிறார்கள்! அலறுகிறார்கள்! 'வெள்ளையன் சென்றான்—கொள்ளையர்களின் ஆட்சிக் கொடி பறக்கிறது' என்று குமுறுகிறான், இந்த நாட்டு ஏழை.

காங்கிரஸ் கூட்டங்களில் இன்று தேசியக் கொடி பறக்கும்—அந்தக் கொடியினை அண்ணாந்து பார்க்கும், தேசிய நண்பர்கள், உள்ளம், தெம்போடா, விளங்கும்? எவ்வளவு, இரத்தம், கொட்டினர், ஆகஸ்டு 15-ஐப் பெற! அவ்வளவும், இவ்வளவு எளிதாக ஆகிவிட்டது, இன்று!! வேட்டுச்சப்தம்—கேட்கும், பல இடங்களில், இன்று. ஆனால், துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டுக் கேட்டுப் பழகிப்போன குடிமகன், சுதந்திரதின வேட்டுச் சப்தத்தைக் கேட்டதும், ஆனந்தமடையவேண்டியவன், அலறிப் பதங்குகிறான்—ஐயகோ! என்று ஓடுகிறான்.

அந்தளவுக்கு, ஆறாண்டுகால சுயராஜ்யம், அமளிப்படுத்தியிருக்கிறது பூமியை! — இன்பம் அடையவேண்டியவன், துன்பத்தால் மூழ்கடிக்கப்படுகிறான். சுகவாழ்வு தரவில்லை, சர்க்கார்! சுட்டுப் பொசுக்குகிறது!!

வாழ்வுகேட்டால், குண்டுகளைத் தருகிறது!—அப்பப்பா, எவ்வளவு கோரமான காட்சி? இந்தப்பதினைந்து, எவ்வளவு நம்பிக்கையைச் சுமந்துவந்தது, ஆறு ஆண்டுக்கு முன்.

இந்தப் பதினைந்து, எவ்வளவு கொடுமையைக் காட்டிவிட்டது, கடந்த மாதம்.

விடுதலைத் தேதி, ஆண்டுக்கொரு முறை வரும்போது, ஒவ்வொருவரும் அகமகிழ்வர். அந்நியக் கொடுமை ஒழிந்ததினம் என்னும், ஆனந்தத்தால்.

ஆனால், இங்கு! 15, என்றால், 'படுகொலை' ஞாபகத்துக்கு வருகி றது— அழுகுரல் எழுப்பும் தாய்—கதறும் கன்னியர்—குமுறும் குடும்பங்கள் — கொடுமைக் காட்சிகள், கண்முன் ஓடிவருகின்றன.

எவ்வளவு பெரிய கோரம், இது! ஆகஸ்டு மத்தியில் ஆட்சிக் கோலேந்தியபோது, இந்திய உபகண்டத்தின் விடுதலை ஆட்சி, ஆச்சாரியாரின் தலைமையில் தான், ஆரம்பித்தது. அதே, ஆச்சாரியார்தான், இன்று, நமக்கு 'ஜூலை 15' தந்தி ருக்கிறார்.

வெள்ளையன் இருந்த பீடத்தில், இந்த உபகண்டத்து ஆச்சாரியா அமருகிறார், என்றதும், அகமகிழ் பெற்றோர், ஏராளம்—அவர்களில் நமக்கும், இடமிருந்தது.'

ஆனால், இன்றோ! அதே ஆச்சா யார், வெள்ளையனையும் மீறி, விப தங்களைக் குவிக்கிறார் — வேதனைப் படுவோர், ஏராளம். அவர்களில் நமக்கு, முதலிடம் தரப்பட்டிரு கிறது.

ஆகஸ்டு 15—ஒரு நல்ல நாள் ஆனால் நாசகாலர்களின் கையில் சிக்கி, ஒளியிழந்துவிட்டது—சோக மாகிவிட்டது.

ஜூலை 15 ஓர் தியாகதினம் அது, விழுச்சி பெற்ற திராவிட தின் வீர இதயங்களில், சுடர் விடு றது அன்று நடந்த கொடுமைகள் சாகுமளவும், மறக்கமுடியாது! தா கம் விடுதலைபெற்றபிறகும், நினைவி நீடிக்கும்!!

இதுபோன்ற 'ஜூலை 15' களு குப்பிறகுதான், 'ஆகஸ்டு 15' ஐ பெற்றனர், தேசிய நண்பர்கள்.

ஆனால், பெற்ற விடுதலையி பெருமைக்கு இழுக்கு ஏற்படுத் விட்டனர்—பெற்ற சுதந்திரத் மாசுபடுத்திவிட்டனர்.

சுதந்திரதேவி — கண்ணீர் வடி கிறாள், ஆனந்தமடையவேண்டி அவளது இதயம், நாசகாலர்களி போக்கால், இரத்தக்கண்ணீர் வடி கிறது.

அவள், தியாகிகளைப்பார்க்கிறா அவள் கண்களில் ' ஆகஸ்டு 1 மறைந்து, 'ஜூலை 15' தோன் கிறது. அந்தப் புதுநாளில், தியாக பாதை புகுந்து, வீரமுழக்கம் செ யும், வெற்றிச் செல்வர்களை நோக் நடந்துகொண்டிருக்கிறாள்.

சுதந்திரதேவி, தன்னை ஒரு போதுபோற்றினோர், சூதர்களாகி விட்டதைக் கண்டு சிந்தை நொந்து, திரும்பிவிட்டாள். தியாகிகளின் கூடாரம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறாள்! அவளது, நடை, வலுக்க வலுக்க, சிறைக்கூடத்தின் கதவுகள் திறக்கின்றன—மூடுகின்றன. நம்முடைய அருமைத் தோழர்கள், கொண்டுபோய், பூட்டப்பட்டவண்ணம் கிடக்கிறார்கள். சுதந்திரதேவி, நெருங்க நெருங்க, ஆதிக்கம் செலுத்துவோர், அடிக்கடி, சிறைக் கதவுகளை, திறந்து திறந்து மூடுவர். அந்தக் காட்சி, இன்று! அதனை விளக்குகிறது—அகமகிழ்ச்சியின்றி,கழியும், ஆக:15.

இதனை, உள்ளத்தில் கொள்வோம்—'ஜனநாயக'க்குப்பின் 'ஆகஸ்டு' நிச்சயம்.

அடக்குமுறை வெறிக்குப்பின், வெற்றி காண்பது உறுதி.

நமக்கு இன்பம் தரும் அந்த 'நாள்' நோக்கி — நடந்துசெல்வோம்! அக்கிரமம் ஒழிபட்டும்! அன்பாட்சி மலரட்டும்!!

✻

★ வெற்றியல்ல ★

"அப்துல்லா! என்னுடைய அருமைச் சகோதரர்"—நூற்றுக் கணக்கான பொதுக் கூட்டங்களில், இவ்வண்ணம், பண்டித நேரு முழக்கமிட்டதை அறிவோம், நாம். வெட்டிய மீசையுடன், காஷ்மீர் குல்லாய் அணி செய்ய புன்சிரிப்போடு, அவர் இவரையும் இவர் அவரையும் கட்டித் தழுவிய படங்களை, அடிக்கடி கண்டிருக்கிறோம்.

அப்துல்லா, டில்லிக்கு வந்தால், வழங்கப்பட்ட ராணுவ மரியாதை—ராஜோபசாரம்—கொஞ்சநஞ்சமல்ல.

இந்தியத் தலைவர் குலாவுவார்—பண்டிதர் மாளிகையில் விருந்துபசாரம் நடக்கும்—பல இடங்களுக்குஅழைத்துச் செல்லப்படுவார்—அதனை படம் எடுத்து, இந்திய பிரச்சார இலாகா, சினிமாக் காட்சிகளாகக் காட்டும்.

அந்த அப்துல்லா, இன்று சிறையில்! காஷ்மீரச் சிங்கம் — விடுதலை வீரன்—தியாகச் செம்மல்—காங்கிரஸ் தலைவர்—ஷேக் அப்துல்லா, தான் விடுதலை பெற்றுத் தந்த காஷ்மீர மண்ணில் சுதந்திரமாக உலவ முடியாது, சிறைக்குள்ளே பூட்டப்பட்டிருக்கிறார்.

வாழ்க ஷேக் அப்துல்லா!—இங்ஙனம், அவரை வாழ்த்திய, மந்திரிமார்கள், அவரைச் சிறையிலே பூட்டி விட்டனர். அவரது உருவம் கண்டால், தலைவணங்கித் தெண்டனிட்ட போலீஸ் அதிகாரிகள்—அவரை அழைத்துச் சென்று, சிறைக்குள்ளே பூட்டிவிட்டனர்.

சிறைக்குள்ளே, அந்தச் சிங்கம்! வெளியிலே, அவரால், உணர்ச்சி பெற்ற மக்கள்!!

✻

திடீர் நிகழ்ச்சிகள், மத்திய கிழக்குப் பிரதேசத்துக்கு மட்டுமே, சொந்தமென எண்ணியிருந்தோம். ஆனால், சின்னஞ்சிறு பூமி, சிங்கார காஷ்மீரில் செய்து காட்டப்பட்டிருக்கிறது.

திடீரென காஷ்மீரின் ஜனாதிபதி எனும் பட்டத்தோடு வீற்றிருக்கும் முன்னாள் மன்னர்—உத்திரவு பிறப்பித்தார் அப்துல்லா கைது செய்யப்பட்டார். சிறைக்குள்ளே அவர்!

அப்துல்லா, இதுபோல, இதே காஷ்மீர மன்னரால், முன்னர் எத்தனையோ முறை சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்—சுதந்திரப்போரின் போது. அப்போதெல்லாம், அப்துல்லாவின் முகத்தில் புன்சிரிப்பு இருக்கும் — அவருடைய தோழர்களாம் பண்டித நேரு முதலியோரிடம், ஆத்திரம் இருக்கும். 'ஐயோ! அப்துல்லாவை, காஷ்மீர ராஜா, வதைக்கிறார்—வாட்டுகிறார்' என்று காங்கிரஸ் தலைவர்கள் கர்ஜனை எழுப்புவர்.

இன்றும் அதே மன்னர்தான்!—ஆனால், மக்கள் தலைவர் எனும்போர்வையில்!!

இப்போதும் அவர்தான் அப்துல்லாவைக் கைது செய்ய உத்தரவிட்டார்! ஆனால், பண்டித நேரு முதலியோரின் சம்மதத்தோடு!!

காஷ்மீரத்தின் பிரதமர், காராக்கிரகத்தில் கிடக்கிறார்—அவர் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த விசித்திர நிகழ்ச்சி கேட்டு, உலகம் வியப்படைகிறது. டில்லியைப்பார்க்கிறது—'என்சகோதரன்' என்று அணைத்து, வாழ்த்தி, கோடிக்கணக்காக வாரித்தந்து, குலவினாரே, பண்டிதர்—அவரைப் பார்க்கிறது! கண்ணீர் வடிப்பார்—இது, உலகம், எதிர்பார்ப்பது. கர்ஜித்து கிளம்புவார்—பண்டிதருக்கும் அப்துல்லாவுக்கும் இருந்த தொடர்பை அறிந்தோர், எதிர்பார்க்கின்றனர், இவ்விதம் அவரோ, புன்சிரிப்புத் தருகிறார்! அப்துல்லாவைக் கைது செய்து விட்டார்களா?— அது, அவர்கள் இஷ்டம் — புது மந்திரி சபை ஏற்பட்டிருக்கிறதா — அது அவர்கள் இஷ்டம்—துப்பாக்கியால் சுடுகிறார்களா— அது அவர்கள் இஷ்டம் என்று எதுமறியாதவர்போல், விளக்கங்கள் தந்து கொண்டிருக்கிறார்.

தோழன்! இன்றல்ல சுதந்திரப் போராட்டக்காலத்திலிருந்து.

அவன், சிறையில்! — ஆனால் பெருமிதத்தோடு, பேசுகிறார், பிரதமர், பண்டிதர்.

✻

பிரிந்துசெல்வோம் — காஷ்மீர் ஓர் தனியரசு — இதில் அந்நியர் எவருக்கும் இடமில்லை. இவ்வண்ணம், உரிமை முழக்கம் செய்து வந்தார், அப்துல்லா.

இந்த முழக்கம், காஷ்மீரைத் தமது பிடியில் கிடக்கச் செய்ய வேண்டுமென்பதற்காக பொன்னையும், பொருளையும், தன்மதிப்பையும் கௌரவத்தையும் தத்தம் செய்து, தடுத்தோரை மிரட்டி, தகாது எனச் செப்பியோரிடம் சண்டையிட்டு, சாகசம் ஒன்றாலேயே அத்தனிர் பூமியில் செல்

கனதனவான்களின் கூடாரம் அல்ல, நம் கழகம். ஏழை எளியவர்களின் பாசறை. எனவேதான் கல்லடி, சொல்லடி, ஆட்சியாளர் தரும் அடக்குமுறை அனைத்தையும், தாங்கிக்கொள்ளும் வலிவும் வனப்பும் ஏராளமாக இருக்கின்றன, நம் கழகத்துக்கு.

வாக்கு செலுத்தலாம்," என்று கனவுகண்டு வந்தார், பண்டிதர் நேரு.

கனவு பலிக்கவில்லை! அப்துல்லா அடிமையாகக் கிடக்கவிரும்ப வில்லை!!

விருந்துபசாரத்துக்கு நன்றிதெரிவித்தார் — அன்புக்கு அன்பு செலுத்தினார் — மரியாதைக்கு மரியாதை காட்டினார் — ஆனால், தன் மதிப்பை இழக்கத் தயாராக இல்லை! தன்னுடைய பூமிக்கு, விடுதலைபெற விரும்பினார்!!

அவருடைய விடுதலை வேட்கை — விசித்திரியைத் தந்தது. பண்டிதருக்கு.

காஷ்மீர். தனிநாடு! — என்றார் அப்துல்லா. உலகம் உண்மைதானே, என்றது. பண்டிதரோ, சினந்தார்!

பலன். இன்று, அப்துல்லா சிறையில். இவர்கள், வெளியில்!! ஆனால், பாராளுமன்றத்தில் பேசும்போது, 'அப்துல்லாவைச் சிறையிலிட்டது, அவர்கள் இஷ்டம்' எனத்தெரிவித்திருக்கிறார்.

அவர்கள், இஷ்டமாம்! — தெரிவிக்கிறார், பண்டிதர். காஷ்மீரம், எகிப்து அல்ல; இந்தியாவுடன் ஒட்டிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுவது. அங்கேயுள்ள மன்னர், இந்து! மக்கள் முஸ்லீம்கள்!! இந்துமன்னர், இந்திய அரசின் துணையால், இன்னும் வாழ்பவர் அவர், அப்துல்லாவைக் கைதுசெய்தாரென்றால் அது இந்தியா வழங்கிய தைரியத்தின் விளைவே அழிய — அப்துல்லாமீது அடக்குமுறையை வீசக்கூடிய அளவு தைரியம் பெற்றவரல்ல, அவர்.

இதனை உலகு உணரும் — ஆனால், பண்டிதர், பசப்புகிறார்!

*

இந்தியாவின் தூண்டுதல்! — இவ்வண்ணம் பிரிட்டிஷ் ஏடுகள், கூறுகின்றன

தன்னைத் தட்டிப் பேசிய அப்துல்லாவை பழி வாங்கிவிட்டார். பண்டிதர் — இவ்விதம் பாகிஸ்தான் பக்கம் கூறுகிறார்கள்

ஆனால், இந்திய ஏடுகளோ, நேற்றுவரையில் அப்துல்லாவைப் புகழ்ந்ததை மறந்து — துரோகத்தின் பலன் துரோகிக்குக் கிடைத்த பரிசு, என்றெல்லாம் தீட்டுகின்றன.

அப்துல்லா — சுதந்திர காஷ்மீரத்தை அடைய விரும்பினார் — அதனால், துரோகியாகிவிட்டார்! எவ்வளவு விசித்திரமான ஏடுகள் இவை — எத்தகைய வேடிக்கையான சுயராஜ்யத் தலைவர்கள், டில்லியில்.

அப்துல்லா டிஸ்மிஸ் — புதுமந்திரிசபை — இந்த நிகழ்ச்சிகளுக்குள் அடங்கிக்கிடக்கும் சதிகளை, மக்கள் அறியாமல் இல்லை.

இச்சதிகளிலே, இந்திய சர்க்காருக்கிருக்கும் பங்கு இலேசானதல்ல.

இதனை உலகம், அறியும் — பண்டிதரின் மௌனமே, இதனை பறைசாற்றுகிறது

தன்னுடைய பேச்சைத் தட்டிப் பேசிய அப்துல்லாவைப் பழிவாங்கிவிட்டது டில்லி.

இதன்மூலம், தனக்கிருக்கும், செல்வாக்கை, அகிலஉலக அரசியல் அரங்கில், காட்டிக்கொண்டுவிட்டார், பண்டிதர்.

உண்மையில், அவருக்கு இது ஓர், 'கித்தாப்பு'க்கான காரியம் தான்! ஆனால், மனித உரிமைக்கு, அரசியல் கண்ணியத்துக்கு, மிகமிக அருவருப்புக்குரிய செயல். அதன் விளைவு இப்போது தெரியாது! குறுமதியினர் எப்போதுமே துந்துபி முழக்குவது சகஜம். ஆனால், நீதியும் உண்மையும்தான், என்றும் வெல்லும் இன்று, அப்துல்லா சிறையில்! — ஆனால், அவரை தம்முடைய இதயச் சிறையில் மூடியிருக்கும் மக்கள் வெளியில்!! அவர்கள் அனைவரும், முஸ்லீம்கள். இதனை, ஆதிக்கபீடமாம், டில்லி, மறந்துவிட்டது. இதன் விளைவுகளை, எதிர்காலம் போதிக்கும்! காஷ்மீரில் நடைபெற்ற சம்பவம், மிகப் பெரிய துரதிர்ஷ்டமாக முடியப்போகிறது டில்லி வெறியர்களுக்கு

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியுமதேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

மானேஜர்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கே போவது? மக்களின் கருத்தை — ஆவலை — அமைதியோடு, கட்டுப்பாடாக, கண்ணியத்தோடு, கூறுவதா குற்றம்?

ஜனநாயக முறையில் முயன்று பார்த்தும் முடியாமற்போனதன் விளைவாகத்தான், மற்ற இரண்டு, அறப்போர்களும் உருவாயின.

ஜனநாயகம் கேலிக்கூத்தாகும் பொழுது, அறப்போர் — கண்டனக் கூட்டம், நாட்டின் நலிவை சர்க்காருக்குணர்த்த தி. மு. க. முயன்றது குற்றம்? சர்க்கார் சாதாரண வார்த்தைகளால் பதில் சொல்லக்கூடாதா? குண்டுகளாலா பேச வேண்டும்! நீதிபதி அவர்களே! சூழ்நிலைகளின் விளைவால், அமைதியான மக்கள் ஆத்திரமடைந்தார்கள் — சட்டம், அதிகாரம் ஏந்தியவர்களின் கையில் சிக்கி கொடுமை'களின் 'என்சின்' (Engine) போலாகிவிட்டது.

மக்கள் தங்கள் வெற்றிக் கீதத்தைப் பாடும்போது, அதன் உண்மைக் குரலை மறைப்பதற்கு, கொடுங்கோலர்களால் சட்டம் துணைக்கழைக்கப் பட்டிருக்கிறது.

சட்டத்தை மீறிய ஜனவரையல்ல, இந்த மண்ணின் இன்றைய நிலையையே, இந்த வழக்கு எடுத்துச் சொல்லுகிறது மக்களின் உள்ளத்தில் ஒரு உற்சாகம் — ஆர்வம் — மனோவேகத்தைக் காண்கிறோம். நீதியைப் பெறவும், சுதந்திரத்தை அடையவும், அவர்கள் துடிக்கிறார்கள். அவர்களுடைய உற்சாகத்திற்கு நாங்களே காரணம் என்பது கேட்டு மகிழ்கிறோம்.

நீதிபதி அவர்களே, குற்றம்செய்யத் தூண்டியது என்பதையல்ல, நான் விளக்குவது சர்க்கார் தரப்பில் கூறப்பட்ட எதையும் நான் மறுக்கவில்லை! இத்தகைய சூழ்நிலைகளில், நிலைகள் யாவும் குற்றங்களா என்பதைமட்டுமே, கேட்கிறேன் மக்களின் ஆசையை — பேரிக்கைகளை மதியாமல் ஆட்சிபீடம் ஏறியோர் அக்கிரம வழியில் சென்ற காரணத்தால், அல்லவா, இத்தகைய இன்றியமையாத நடவடிக்கைகளில் நாங்கள் இறங்க நேர்ந்தது?

நம்முடைய முதலமைச்சரை — பக்திமான், கடவுளுக்குப் பயந்தவர் என்றெல்லாம் கூறுகிறார்கள். ஆனால் அவரோ, மனிதனையும் மதிக்கவில்லை —கடவுளையும் மதிக்கவில்லை. 'மக்கள் குரலே, மகேசன் குரல்' என்றோர் அரசியல்மொழி உண்டு. இதனை, எவரும், அலட்சியப்செய்ய முடியாது. ஆனால், தெய்வத்துக்கு பயந்தவர்—பக்திமான் — நம்முடைய முதலமைச்சர், மக்கள் குரலைக் கேட்க மறுக்கிறார்! அதனால் மகேசன் குரலையும் அவர் மதிக்கவில்லை!!

மேன்மை தங்கிய நீதிபதி அவர்களே, சாதிபேதமும் வகுப்பு வித்தியாசங்களுமற்ற திராவிடஸ்தானை, சோஷியலிசப்பாதையில் நிறுவுவதே தி. மு. கவின் உயர்ந்த இலட்சியமாகும். ஆனால் ஆட்சியிலிருப்போரோ, இந்த இலட்சியத்துக்கு இடையூறுசெய்து, அகிரகாரமும், சமத்துவமற்ற தன்மை நீடிக்கவும், வெளிப்படையாக சதிசெய்கிறார்கள் —இந்த நாட்டை, தேவர்கள், வானரர்கள், பர்ணகசாலைகள், யாககூடங்கள் இருந்த காலத்திற்குக் கொண்டுசெல்ல முனைகிறார்கள்.

நவீன முறையில் நாங்கள் நிறுவ விரும்பும் சுதந்திர திராவிடக் குடியரசு முயற்சியை, அழிப்பதே அவர்கள் நோக்கமாகும். ஆகவே, மக்களுக்காகப் பணியாற்றும் நாங்கள், மக்களின் நல்வாழ்வை மனதிலெண்ணி, பழைமைக்கு நாட்டை அழைத்துச் செல்லும் பைத்யக்காரத்தனமான போக்கை எதிர்த்து நடவடிக்கைகள், எடுக்கவேண்டியவர்களானோம்.

நாங்கள், குற்றவாளிகள், அல்ல.

எங்கள் கடமையை, நாங்கள், செய்தோம்—எங்கள் நாட்டின் உன்னத வாழ்வுக்காகச் செய்தோம். எனினும் இவ்விதம் நாங்கள் ஈடுபட்டதற்காக, எங்களை, இந்த நீதிமன்றம் தண்டிக்க முன் வந்தால், 'கடமையைச் செய்தோம், பலன் கிடைத்து விட்டது', என்று நன்றியோடு, ஏற்றுக் கொள்வோம்.

நீதிபதியவர்களே, எங்களைத் தண்டிப்போரும், திராவிட நாடு ஏற்படுவதற்கான முக்கியத்தையும் அவசியத்தையும் வளர்க்கிறார்கள் என்பதையே கடைசியாகச் சொல்லிக்கொண்டு, என் வாக்குமூலத்தை முடித்துக்கொள்கிறேன்.

"நாங்கள் குற்றவாளிகள் அல்ல"

கே. எ. மதியழகன் வாக்குமூலம்

வாக்குமூலம் கொடுப்பதற்காக எனக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த வாய்ப்பை நான் குற்றவாளி அல்ல என்பதை சட்டத்தின் மூலம் விளக்குவதற்காகப் பயன்படுத்தப் போவதில்லை. எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தை என் நாட்டவருக்கும், நாடாள வந்தவர்களுக்கும் மேன்மைதங்கிய கோர்ட்டாருக்கும், என் நிலைமையை விளக்கவும், நான் மேற்கொண்ட செயல்களை விளக்கவும் அந்த செயல்களுக்கு என்ன அடிப்படை காரணங்கள் என்பதை விவரிக்கவும் எனக்குக் கிடைத்த வாய்ப்பெனவே கருதுகிறேன்.

முதன் மந்திரியார் வீட்டின் முன் புதிய கல்வித்திட்டத்தை எதிர்த்து மறியல் செய்யச்சொல்லியும், டால்மியா அறப்போர் துவக்குமாறும், ஜுலை 15-ல் ரயில் நிறுத்துமாறும். தூண்டினேம், அதற்குக் காரணமான திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டோம், பங்குகொண்டோம், தீர்மானித்தோம். ஆகவே இவைகளெல்லாம் இ. பி. கோ 117, 188, 341 செக்ஷன்கள் படியும் சிடி. போலீஸ் ஆக்ட் 41-வது செக்ஷன் படியும், ரயில்வே ஆக்ட் 108, 122 செக்ஷன்படியும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறோம். இவைகளைப் பற்றியெல்லாம் நான் தனித்தனியாக எதுவும் சொல்லப்போவதில்லை. என்னுடைய செயல்கள், சொற்கள் அத்தனையும் ஒரு முடிவை—லட்சியத்தை அடிப்படையாகக்கொண்டது. அந்த முடிவை அடைவதற்காக என்னுடைய ஆற்றல், சக்தி முழுமையையும் பயன்படுத்தி முயற்சிக்கிறேன்.

திராவிட நாடு வடவர் ஆதிக்கத்திலிருந்து முழு அரசியல் விடுதலை பெற்று, சுதந்திர ஜனநாயக குடியரசு நாடாக ஆகவேண்டும் என்பதும், அந்த சுதந்திர திராவிடநாட்டில் சமுதாய சமத்துவத்தையும், பொருளாதார பேதமற்ற புதிய அமைப்பையும் உருவாக்கி திராவிடர்களின் நல் வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும், பாடுபட வேண்டும் என்பதுதான் அந்த முடிவு—இலட்சியம்.

இந்த இலட்சியத்தின் அடிப்படையில்தான், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பின் கீழ் கடந்த 4 ஆண்டுகளாக என்னுடைய ஆருயிர்த் தலைவரும், சர்க்காரால் இந்த வழக்கில் 1-ஆக குற்றம் சாட்டப்பட்டவருமான தோழர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் பணியாற்றி வருகிறேன்.

சட்டத்தை மீறச் சொன்னேம், மக்களைத் தூண்டினேம் இடையூறு விளைவித்தோம் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் சரியானவைதானு, தவறானவையா என்பதைவிட திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடந்த கால நடவடிக்கைகளை கோர்ட்டார் அவர்களின் பார்வைக்கு வைக்க வேண்டும் என்பதை விரும்புகிறேன். இந்த சர்க்காருக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டோம் என உள் நோக்கம் கற்பிக்கப்படுகிறது. இந்தச் சர்க்காரை எதிர்ப்பது, அதற்காக சட்டத்தை மீறச் சொல்வது என்ற ரீதியில் எங்கள் செயல்கள் எதுவும் அமைந்ததில்லை.

திராவிட மக்கள் நல் வாழ்வும் மேம்பாடுமே எங்கள்செயல்களுக்கு அடிப்படையாகும். இந்த ஆண்டு ஆரம்பத்தில் இந்த ராஜ்யத்தின் கைத்தறி நெசவாளர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக, கைத்தறி இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று, அவ்வியக்கத்தை ஆரம்பித்து, இங்கே குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஐவரும், கைத்தறி வியாபாரிகளாக மாறி, தெருத்தெருவாக விற்று. தேங்கிக்கிடந்த கைத்தறியில் அரை கோடி ரூபாய்க்கு விற்குபடியான நிலைமையை உண்

டாக்கி, இந்த மாகாண சர்க்காரின் நோக்கத்திற்கு ஆதரவு அளித்து, பெரும்பணி செய்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் என்பதை சர்க்காரே ஒத்துக் கொண்டுள்ளனர். தஞ்சை, திருச்சி புயல் நிவாரண நிதிக்காக ரூ 25000 திரட்டி, கைத்தறித் துணிகளாக வாங்கி, சென்னை அரசாங்கத்தின் மூலம், பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பிவைத்தோம். இந்த மாகாணத்திலுள்ள எந்த அரசியல் கட்சியும், இந்த அளவு தொகை உதவவில்லை என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன் திராவிட இளைஞர்களின் கல்வி பெருகவேண்டும் என்ற நோக்கத்துடன், சென்னை தியாகராயர் கல்லூரி, காஞ்சி பச்சையப்பன் கல்லூரிபோன்ற கல்விக் கூடங்கள் நிறுவுவதற்கு நாடகங்கள் ஆடி பெருநிதி உதவியுள்ளோம்.

புதிய கல்வித் திட்டத்திற்கு எதிராக முதன்மந்திரியார் இல்லத்திற்கு முன்பு சாத்வீக மறியல் செய்யச் சொன்னக் குற்றத்திற்காக, விசாரிக்கப்படுவதற்காக உண்மையிலேயே மகிழ்கிறேன். இந்த வழக்கு விசாரணை, ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தின் சூட்சுமத்தையும், அதனாலே திராவிட சமுதாயத்திற்கு நேரவிருக்கிற பேராபத்தையும், இன்னும் கோடிக்கணக்கான திராவிடர்களின் மனதிலே, தி. மு. க. ஏன் இந்தப் பணியிலே ஈடுபட்டுள்ளது என்ற உண்மையையும், முக்கியத்துவத்தையும் உணரவைக்கும் கருவியாக அமைந்திருக்கிறது எனக் கருதுகிறேன்.

சாத்வீக மறியல், சட்டப்படி குற்றமல்ல என்பது என் எண்ணம். எங்கள்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் உண்மையில் மனதாரக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்று ஆச்சரியப்பட்டேன். மறியலுக்கு ஏற்பட்டிருக்கிற மகத்தான வெற்றியும், மக்கள் மனதிலே ஏற்படுத்தியிருக்கும் மன மாறுதலுமதான சாத்வீக மறியலுக்கே கூட நாங்கள் எப்படித் தூக்கப்பட்டோம் என்பதை, கடந்த மூன்றுமாத தி. மு. க. நடவடிக்கைகளைக் கவனித்தால் நன்கு விளங்கும்.

புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து நாடே எழுந்தது. ஆசிரிய சங்கங்கள், மதிவாணர்கள், மாவட்ட மன்றங்கள். அரசியல் கட்சிகள், அத்தனையும், 'இது கூடாது, ஆகாது' என்றே முழங்கின. பொருட்படுத்தினாரில்லை நமது முதலமைச்சர். 31—5—1953-ல் அரக்கோணத்தில் குழுமிய தி. மு. க. பொதுக்குழு (ஜெனரல் கவுன்சில்), திட்டத்தைக் கைவிடுமாறு வேண்டியது. கவனித்தாரில்லை நமது முதலமைச்சர். ஜூன் 21-ல், நாடெங்கும், ஆயிரக்கணக்காக கண்டனக் கூட்டங்கள் நடத்தி, லட்சக் கணக்கான பெற்றோர்களின் கையெழுத்துக்களை வாங்கி முதலமைச்சருக்கு அனுப்பி வைத்தோம். அவைகள், வந்து சேர்ந்தது, என்று கூட அவர் சொல்லவில்லை. ஜூலை 8-ம் தேதி, எம். எல். ஏ-க்களிடம்—எல்லா எம். எல். ஏ-க்களிடம் கூட அல்ல—எங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்களும், திராவிட நாடு பிரச்னையை ஆதரிப்பவர்களுமான 45 எம். எல் ஏ. நண்பர்களிடம் ஊர்வலமாகச் சென்று, 'சட்ட 'சபையிலேயே வாதாடுங்கள்,' என வேண்டிக் கொண்டோம். அந்த ஊர்வலத்திற்குத்தான், சென்னையிலே, 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. மறியல் செய்வதை விட வேறு மார்க்கம் என்ன இருந்தது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களைக் கைது செய்த மறுநாள், சட்டசபையில், புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்தும், கைது செய்ததைக் கண்டித்தும் நூற்றுக்கு மேற்பட்ட எம். எல். ஏ.க்கள் சபையைவிட்டு வெளியேறினர். அப்போதும் மக்களின் மனநிலையை உணர்ந்தாரில்லை. கடந்த வாரத்தில் புதிய கல்வித் திட்டத்தை யோசனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற சர்க்கார் தரப்புத் தீர்மானத்திற்கு 'இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்து, நிபுணர் கமிட்டிக்கு விட வேண்டும்' என்ற எதிர்க்கட்சித் திருத்தம், 139 ஓட்டுகள் பெற்றும், சர்க்கார் தரப்பு 137-ஓட்டுகள் பெற்றும், தீர்மானம் திருத்தத்துடன் நிறைவேறியது. சாதாரண ஜனநாயக சம்பிரதாயப்படி, வேறு நாடுகளாக இருந்தால், தோல்வியடைந்தவுடன் ராஜினாமா செய்திருப்பர். மந்திரி சபையார். ராஜினாமா செய்யாதது மட்டுமல்ல, 'எதிர்க்கட்சி தீர்மானம் வெறும் சிபாரிசுதான்; சட்டசபைத் தீர்மானத்தை அமுலுக்குக்கொண்டு வரப்போவதில்லை,'' என தத்துவ விளக்கம் பேசும் அரசாங்கம் இன்றைய ஆட்சிபீடத்தில் இருக்கிறது. ஜனநாயகம், கேலிக் கூத்தாக்கப்படும் இந்நிகழ்ச்சியை, நமது துர்ப்பாக்கிய நாட்டைத் தவிர, வேறு எங்கே காண முடியும் என்று தெரியவில்லை தூத்துக்குடி, கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகக் கொலைகளைவிட, பெரியகொலை, இந்த ஜனநாயகக் கொலை என்பது எனது தாழ்மையான எண்ணம்.

ஏராளமாகச் சொல்லிவிட்டேன். ஒன்றே ஒன்றிற்கு நமது முதன் மந்திரியாருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்: திராவிட நாடு விடுதலைப் போராட்டத்தில், எனது தலைவரும், விடுதலை விளக்கை வீடு தோறும் ஏற்றிவைத்தவரும், லட்சக்கணக்கான திராவிட இளைஞர்களின் இதயத்தில் நம்பிக்கைச் சுடராக ஒளிவிடுபவருமான தோழர் அண்ணாதுரை அவர்களுடன், பங்குபெற வாய்ப்பளித்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பு, இந்தத் தலைமுறையிலே பிறந்த திராவிட இளைஞர்களில் ஒருசிலருக்கே கிடைக்கக் கூடும். அந்த வாய்ப்பு, எனக்குக் கிடைத்ததற்காக மகிழ்கிறேன்; பெருமைப்படுகிறேன். திராவிட சமுதாயம் பல நூற்றாண்டுகளாக அடைந்த துயரமும், செய்த தியாகமும், ஒரு நாளும் வீண்போகாது, நிச்சயமாக வெற்றிபெற்றே தீரும்.

மதிப்பிற்குரிய கோர்ட்டாரவர்கள், நான் குற்றவாளி எனக் கருதி, தண்டனை அளித்தால், அதை நான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

★

ஐவர் தந்த வாக்குமூலம்!

ஆங்கிலத்திலும், தமிழிலும், சென்னை தலைமைக் கழகத்திலிருந்து சிறு நூல் வடிவில், விரைவில் கிடைக்கும்.

என் இந்த வரட்டுப்பிடிவாதம்?

[29—7—53ல் எ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் சட்ட சபையில் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசிய பேச்சு]

ராஜாஜி அவர்கள் சர்வாதிகார முறையில சட்டசபை அங்கத்தினர்களைக் கேளாமல் ஆரம்பக் கல்வித் திட்டத்தில் மாறுதல் ஏற்படுத்தி அவசரமாக அமுலாக்கியதை நான் வன்மையாகக்கண்டிக்கிறேன். இந்த மாறுதலால் பிற்பட்ட இனத்தாரும் ஆதிதிராவிட மக்களும் பொதுவாக திராவிட இனம் முன்னேற விடாமல் தடுப்பதற்கு ஆச்சாரியார் கொண்டுவந்த சதித்திட்டமென்று அவர்மீது குற்றஞ் சாட்டுகிறேன். மதசார்பற்ற அரசாங்கம் என்று கூறிக்கொண்டு மறைந்துவரும் வர்ணாஸ்ரம தர்மத்தை நிலைநாட்ட—ஆரியத்திற்கு ஆக்கந்தேட, திராவிடர்களை சூத்திரர்களாக்கி—உழைப்பாளிகளாக வைத்து உழைக்காத ஓர் சமூகம் உயர்ந்தோர் [illegible] வகை செய்யும் திட்டமென்று நான் கருதுகிறேன். இந்நாடு சுதந்திரம் அடைந்ததென்று காங்கிரஸ்காரர்கள் கூறுகின்றனர். சுதந்திரம் அடைந்த நாட்டில் 100க்கு 10பேர் தான் படித்தவர்கள் என்பதைக் கேட்க வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம். நாடுவிடுதலைப்பெற்றால் கிராமங்கள்தோறும் "இலவச கட்டாய ஆரம்பக்கல்விபுகட்டப்படும் என்று அரசியல் சட்டத்திலே எழுதப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முற்றிலும் விரோதமாகக் குழந்தைகளின் அறிவைக் குழிதோண்டிப் புதைக்கும் கல்வித் திட்டத்தை—ஆச்சாரியார் அவசரம், அவசரமாகக் கொண்டுவந்துள்ளார். நம்முடைய குழந்தைகள் 6-மணிநேரம்படித்தே போதுமான அறிவு பெருமல் இருக்கும் நிலையில் ஆச்சாரியார் மூன்று மணிநேரம் படித்தால் போதும் என்றும், எஞ்சியமூன்று மணிநேரம் அவர்கள் தகப்பன்மார் செய்யும் குலத்தொழிலையே செய்யவேண்டுமென்றும் கூறுவதில்என்னநியாயம் இருக்கிறது. வண்ணான் மகன் வண்ணானாகவும், க்ஷவரத் தொழிலாளி மகன் க்ஷவரத் தொழிலாளியாகவும் குயவன் மகன் குயவனாகவும் இருக்க வேண்டுமென்று கூறும் ஆச்சாரியார், ஆரிய அக்ரகாரக் குழந்தைகளுக்கு என்ன குலத்தொழில் செய்யவேண்டுமென்பதை குறித்து ஒன்றும் கூறவில்லை ஆடு, மாடு ஓட்டி மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியக் கூட்டம் ஆடு மாடு மேய்க்கப் போகுமானால், நம்முடைய குழந்தைகளைக்குலத்தொழில் கற்றுக்கொள்ளச் சொல்லலாம் இந்தக்குலத் தொழில் கற்றுக்கொள்வதால் தொழிலுக்கு முக்யத்வம் கொடுப்பதாக ஆச்சார்யார் கூறுகிறார்.

தொழிலின் அருமையைப்புரிந்து கொள்ள வேண்டுமானல் குலத் தொழிலில் ஈடுபட்டுள்ள க்ஷவரத் தொழிலாளி மகனிடம் ஆச்சாரியார் ஒரு நாளைக்கு க்ஷவரம் செய்து கொண்டால் தொழிலின் அருமையும் மேன்மையும் ஆச்சாரியார் உணரமுடியும். குயவன் மகன்சட்டி பானை செய்வதால் நாட்டினுடைய பொருளாதாரம் உயருமென்று ஆச்சாரியார் நினைக்கிறாரா! இந்த நாட்டிலே முத்தையசெட்டியாரிலிருந்து சாதாரண உழைப்பாளிவரை ஒரு ஆண்டு சராசரி வருமானம் 250 ரூபாய். இந்தநிலையைமாற்றி அமைக்க வழிவகைசெய்யாமல்குலத்தொழிலை செய்துகொண்டிருந்தால் நாடு எப்படிப் பொருளாதாரத்தில்முன்னேற முடியும்? மீன் பிடிக்கும் தொழிலாளியின் மகன்—எட்டுவயதுப்பையன் எப்படிக் கடலில்போய் மீன் பிடிக்க முடியும்? நமது முதல் மந்திரியார் அரசியல் சட்டத்தை மீறி இந்த கல்வி திட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறாரென்று, அவர் மீது குற்றஞ் சாட்டவிரும்புகிறேன். குழந்தைகள் உழைப்பைச் சுரண்ட மாட்டோம் என்று கூறிக்கொண்டு குழந்தைகள் உடலுழைப்பை அதிகரிப்பது நியாயமா! இந்தக் கல்வித் திட்டத்தை கல்வி இலாகா டைரக்டர் வரவேற்பதாக கூறுகிறார்கள். அவர்கள் வரவேற்காமல் என்ன செய்ய முடியும்! வரவேற்கா விட்டால் கண்டிப்பாக உத்தியோகத்திற்கு ஆபத்து ஏற்படும் என்று நினைத்துத்தான் வரவேற்றிருப்பார்கள். இத்திட்டத்தை மாட்சிமை தங்கிய கவர்னர்பிரான் ஆதரித்துப் பேசும்போது குழந்தைகளை ஆறு மணி நேரம் பள்ளிக்கூடம் என்னும் சிறையில் அடைத்துவைக்கக் கூடாது, மூன்று மணி நேரம் படித்துவிட்டு மூன்று மணி நேரம் ஆடு, மாடு, கோழி முதலியவைகளோடு நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் ஏற்படும் என்று சொல்லுகிறார். நம்முடைய குழந்தைகள் எல்லாம் ஆடு மாடுகளோடு பழகாமல் ராஜபவனத்தில் ராஜபோகமாக வாழ்கின்றார்கள் என்று கவர்னர் நினைக்கிறாரா! இந்தக் கல்வித்திட்டத்தை இன்று ஆச்சாரியார் அமர்ந்திருக்கும் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சிய உத்தமர் ஓமந்தூரார் எதிர்த்திருக்கிறார். ஆச்சாரியாரின் அத்யந்த சிஷ்யர் டாக்டர் சுப்பராயன் எதிர்த்திருக்கிறார். காங்கிரஸ் மந்திரி சபையை ஆக்கவும் அழிக்கவும் வல்லமையுடைத்த காமராசர் இவைக்குதவாத்திட்டமென்று கண்டித்துள்ளார். இங்கு வீற்றிருக்கும், பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்கள் சர்வகட்சியினரும் எதிர்க்கின்றனர். கிராமப் பொது மக்களும் இதை வன்மையாகக் கண்டிக்கின்றனர். அந்த முறையில் என்னுடைய தொகுதி மக்கள் (விக்கிரவண்டி) 3182 பேர்கள் இந்தக் கல்வித்திட்டத்தை எதிர்த்து மகஜர் அனுப்பி உள்ளனர். இவைகளை எல்லாம் ஆச்சாரியார் கவனிக்கவில்லை. தன்னுடைய திட்டத்தை எதிர்ப்பவர்களெல்லாம் மித்தலாட்டக்காரர்கள் என்று முதல் மந்திரி கூறுகிறார். மக்கள் நலனுக்காக அரசியல் சட்டமும் திட்டமும் இருக்கவேண்டுமே யொழிய அடிக்கடி அரசாங்கம் போடும் சட்டத்தை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது நியாயமற்றதும் அவசியமற்றதுமாகும். மேலும் தன்னுடைய திட்டத்தை குழந்தைகள் வரவேற்பதாகக் கூறுகிறார் மூன்றுமணி நேரம் பள்ளிக் கூடம் இல்லை என்றால், எந்தக் குழந்

தைகள்தான் வரவேற்கமாட்டார்கள். குழந்தைகளைக் கொலை செய்வதற்கு சான்றாக இன்றைய தினம் "தினத்தந்தியில்" வட ஆற்காடு ஜில்லாவில் பென்னாத்தூர் கிராமத்தில் ஆறு, ஏழு வயதுடைய இரண்டு குழந்தைகள் கிணற்றில் வீழ்ந்து கிடந்ததை கண்ட பெற்றோர்கள் திடுக்கிட்டனர். இதற்கு ஆச்சாரியார் என்ன பதில் சொல்லுகிறார். ஆச்சாரியார் அடிக்கடி போற்றிப் பேசுகின்ற ராம ராஜ்யத்தில்—மனுநீதி சோழன் காலத்தில் மக்கள் குறைகளை சொல்லிக்கொள்வதற்காக ஆராய்ச்சிமணி வாயிற்படியிலே இருந்ததாகக் கேள்விபடுகிறோம். கன்றை இழந்த பசு தன்னுடைய குறைகளைச் சொல்லிக்கொள்ள ஆராய்ச்சி மணி அடித்ததாகப் புராணம் கூறுகிறது. ஆனால் இந்த மாட்டுப் பெட்டிக்காரர்கள் ஆட்சியிலே மக்கள் தங்களுடைய குறைகளை சொல்ல அனுமதி மறுக்கப்படுகிறது. மறுக்கப்படுவது மட்டுமல்ல தண்டிக்கப்படுகிறார்கள். சிறையிடப்படுகிறார்கள். திராவிட நாடு பிரிவினையை ஆதரித்து கையொப்பமிட்டு தி. மு. கழக ஆதரவு பெற்று வெற்றி பெற்ற மந்திரி மாணிக்கவேலரையும், தோழர் விநாயகத்தையும் கண்டு, கல்வித்திட்டத்தைக் குறித்து சட்டசபையில் வாதாடும்படி கேட்டுக்கொள்ள ஜூலை 8-ல் ஊர்வலமாகச் சென்ற தோழர்களையும் தாய்மார்களையும் கைது செய்தார்கள். இதுதான் சுயராஜ்யத்தின் லட்சணமா? ஜனநாயகத்தின் முறை இதுதானா? ஜனநாயகத்தைப் பற்றி ஆச்சாரியாரிடத்தில் பேசுவது தவறு, தவறு (கன்னத்தில் அடித்துக்கொண்டும், கும்பிட்டுக்கொண்டும்) ஜனநாயக முறையில அவர் சட்டசபைக்கு வந்தவர் அல்ல. கவர்னர் கதவு திறக்க கொல்லைப்புற வழியாய் வந்தவர் அவர். ஜனநாயகத்தைப்பற்றி அவரிடம் பேசுவதை நிறுத்திக்கொள்கிறேன். தி. மு. கழகத்தார்கள் ஜூலை 11, 12-ல் சென்னையில் மாநாடு கூட்டி அதன் தீர்மானத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் கவனிக்கவில்லை. திட்டமிட்டபடி ஆச்சாரியார் வீட்டு முன்னால் 14—7—53-ல் அமைதியான முறையில் மறியல் செய்யத் திட்டமிட்டிய அண்ணா மற்றத் தலைவர்களையும் சிறைசெய்தீர்கள். இதுவரை கல்வித் திட்டத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கான தோழர்கள் சிறைக்கூடம் புகுந்திருக்கின்றனர். தடியடி—பட்டிருக்கிறார்கள். அடக்குமுறை சட்டத்திற்கு அளவே இல்லையா! தியாகராயநகரில் சாத்வீக முறையில் மறியல் செய்யவரும் தோழர்களை தடிகொண்டு அடித்தும் கண்ணீர் புகை விடுத்தும் தாக்குவது நியாயமா! அழகான அரசன் நல்லாட்சி நடத்துபவனாக இருந்தால் பவனி வரும்போது தன்னைப் பார்க்க வரும் மக்களைக் கண்டு மகிழ்வான். அரசன் குஷ்ட வியாதியால பீடிக்கப்பட்டவனாய் இருந்தால் பொது மக்களைக் காண வெட்கப்படுவான். கொடுங்கோலனாய் இருந்தால் மக்கள் காணாமல் மறைந்து வசிப்பான். அதைப்போலத்தான் ஆச்சாரியார் ஆட்சிக்கு குஷ்டம் பிடித்திருக்கிறது. ஆட்சியில் பல கோளாறுகள் இருப்பதால்தான் பொதுமக்களைக் காண அஞ்சுகிறார். போலீஸ் துணைகொண்டு பவனி வருகிறார் ஆச்சாரியார். 24—7—53-ல் அக்ரகாரம் தோறும் போலீஸ் படையை நிறுத்தி வைத்திருக்கிறார் ஆச்சாரியார். தி. மு. கழகத் தலைவர்கள் ஆரியத்திற்கு ஆபத்து விளைவிக்கத் திட்டமிடுவதுபோலவும் ஆச்சாரியார் அக்ரகாரத்திற்குப் பாதுகாப்பளிக்க போலீஸ் பந்தோபஸ்து அளிக்கப்பட்டது போலவும் பார்ப்பனர் வீடுதோறும் போலீசை நிறுத்தி ஒரு பீதியை உண்டுபண்ணினார். எது பார்ப்பனர் வீடு என்று தெரியாமல் இருந்ததைக் காட்டிக் கொடுத்ததும் ஆச்சாரியாரைச் சேரும். ஆச்சாரியார்தான் அக்ரகாரத்தின் 1 நம்பர் விரோதி. மறைந்து வரும் ஜாதித் துவேஷத்தைக் கிளப்பி விடுபவர் ஆச்சாரியார்தான். எங்களுக்கு ஆரியர் மீது விரோதம் கிடையாது. ஆரியத்தைத்தான் வன்மையாகக் கண்டிக்கிறோம். தூத்துக்குடி புதுக்கிராமச்சம்பவங்களுக்கும் தி. மு. கழகத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. தி. மு. கழகத் தலைவர்கள் ஜாதித்துவேஷம் உண்டாக்குவதாக ஆச்சாரியார் கூறுகிறார். இதுவரை ஜாதித்துவேஷத்தை உண்டாக்குகிற நிகழ்ச்சிகளைக் கழகம் உண்டுபண்ணவில்லை. நேற்றைய முன்தினம் பல்லாவரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் ஆச்சாரியார் பேசும்போது "ரயிலை நிறுத்தத்திற்கும் கல்விக்கும் என்ன சம்பந்தம்? பைத்தியக்காரத்தனமாய் இருக்கிறதே என்று நேரு சொன்னார். பைத்தியக்காரத்தனம் என்கிறீர்களா? மறுபடியும் ரயிலை நிறுத்துவோம் என்று தி. மு. க. தோழர்கள் ரயிலை நிறுத்தியதாகக் குழப்புகிறார். ஏற்கனவே சட்டசபையில் "நேரு நான்சென்ஸ் என்றதைக் கண்டிக்க ரயிலை நிறுத்தியதாகவும், புதிய கல்வித் திட்டத்தை எதிர்க்க ஆச்சாரியார் வீட்டு முன்னால் மறியல் செய்வதாகவும்" விளக்கமாகக் கூறியிருக்கிறேன். ஆனால் ஆச்சாரியார் உண்மையை மறைத்துப் பொது மக்கள் முன்னால் பேசியிருக்கிறார். மறியல் செய்யவரும் தொண்டர்கள் மீது கண்ணீர்ப்புகை விடுவதும், தடியடி செய்வதும் சரியா என்று ஆச்சாரியாரைச் சட்டசபையில் கேட்டால் "லேசாக பிரம்பால அடித்தோம்" பதில் கூறுகிறார். லேசாக அடித்தால் ஒரு தோழருக்கு மண்டை உடைந்து, வேறு சிலருக்கு காயம் ஏற்பட்டும் இருக்குமா என ஆச்சாரியாரைக் கேட்கிறேன். ஆச்சாரியார் தன் அந்திய காலத்தில் இப்படியா தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகம், தடை உத்திரவு, சிறைவாசம் என்ற கொடுங்கோலாக காட்சி அளிக்கவேண்டும்? இந்தக் கிளர்ச்சிகள் எல்லாம் தன் ஆட்சியை கவிழ்ப்பதற்கு என்று கூறுகிறார். நான் கூறுவதாவது. ஆச்சாரியார் சாகின்ற வரையிலாவது மந்திரியாக இருக்கட்டும், ஆனால் மக்களுக்குக் கேடு பயக்கும் சட்டதிட்டங்களை எதேச்சாதிகாரமாக கொண்டுவரக்கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கடைசிநேரத்திலாவது கல்வித்திட்டத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி எதிர்க்கிறேன், எச்சரிக்கிறேன். கிழட்டு வரட்டுப் பிடிவாதமான வர்ணாஸ்ரம கல்வித்திட்டத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு சிறையிலிருக்கும் தோழர்களை விடுதலை செய்தால்தான் நாட்டில் அமைதி நிலவும் என்று இடித்து சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

புதிய கண்டுபிடிப்பு!

"எல்லா வரிகளையுமே ஆழ்ந்து கவனித்தால், வருமான வரியைத் தவிர, வேறெந்த வரியும் நியாயமானதல்ல என்பது புலனாகும்."

—ஆச்சாரியார்
6-8-53.

விதி-வினைகளின் சதி

வாலாஜா தாலூகா, வடகடப்பந்தாங்கல் கிராமத்தில், இரண்டரை வயதுள்ள ஒரு ஆண் குழந்தை, பரிதபிக்கத்தக்க விதத்தில் மாண்டது. சொந்த வீட்டுக் கிணற்றில் குழந்தை தவறி விழுந்தது. கிணற்றில் சுமார் 5 அடி தண்ணீர் இருந்தது. குழந்தையைக் காணாது தேடிய தாய், கர்ப்பவதியாய் இருந்தும், குழந்தையின் பாசத்தால், அந்தக் கிணற்றில் குதித்தாள்; குழந்தையைக் காப்பாற்றிவிட்டாள். குழந்தைக்குச் சிறு காயம்கூட ஏற்படவில்லை; அது ஓடியாடி விளையாடியது.

மறுநாள், மேற்படி குழந்தை, வீட்டுக்குச் சமீபத்தில் இருந்த பஜனைக் கோயில் கிணற்றில் எப்படியோ தவறிவிழுந்துவிட்டது. கிணற்றிலோ முழங்கால் அளவுதான் தண்ணீர் இருந்தது. இருந்தும் காயம்பட்டுக் கிணற்றுத் தண்ணீரில் மூழ்கி மாண்டது.

குழந்தையைத் தேடிய தாய், உயிரைப் பணயம் வைத்து முதல் நாள் காப்பாற்றிய தன் செல்வத்தைப் பிணமாகக் கண்டதும் அலறித் துடித்தாள்.

ஆனால், விதி வலிது! அது விடுமோ?

*

இப்படி, ஒரு செய்தி, 8-8-53 தினமணி இதழில் வெளிவந்தது— விதி வலிது என்ற தலைப்பிட்டு.

செய்தி தவறானது என்று கூறவில்லை, நாம். ஆனால், வேண்டுமென்றே அச்செய்திக்கு, 'விதி வலிது' என்ற தலைப்பை வலிந்து இட்டது ஏன் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம்.

இரண்டரை வயதுள்ள குழந்தை 5 அடி தண்ணீரில் விழுந்தும், காயப்படாமல் காப்பாற்றப்பட்டது விதியா?

அதே குழந்தை, இரண்டாவது நாள் முழங்கால் தண்ணீரில் காயப்பட்டு இறந்தது, விதியா?

எதை விதி என்று குறிப்பிடப்படுகிறது? முதல்நாள் குழந்தை கிணற்றில் விழுந்து காப்பாற்றப்பட்டதுங்கூட, இரண்டாவது நாள் அக்குழந்தை கிணற்றில் விழுமளவுக்கு அஜாக்கிரதையாய் இருந்தது, விதியா?

அல்லது குழந்தைகள் விழுந்து சாகுமளவுக்கு, கிணறுகள் தரை மட்டத்தோடு விடப்பட்டிருப்பது விதியா?

குழந்தைகள் விழுந்து சாகுமளவுக்குள்ள அப்படிப்பட்ட கிணறுகளுக்குச் சுற்றுச் சுவர் எழுப்ப வேண்டும் என்றும், குழந்தைகளை அஜாக்கிரதையாக விடுவதனால் ஏற்படும் தொல்லைகளையும் எடுத்து எழுதவேண்டியதைவிட்டு, விதி வலிது என்று குறிப்பிட்டது, ஏன்?

தரித்திரம், பிணி, பஞ்சம் தாண்டவமாடும் இந்த நாட்களிலே மனிதனுக்கு விதி என்ற சொல்லை வீசி, வேதனையிலேயே மீளாது இருக்கட்டும் என்று எண்ணி, மனிதனின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறது—தினமணி.

தப்பி ஓடாத மான், அம்புக்கு இரையாகும்! பறந்து செல்லாத பறவை, வேடன் விரித்திருக்கும் வலையில் விழுந்து தவிக்கும்! குழி இருப்பதைக் கண்டு செல்லாது கோணல் நடையுடன், கரி சென்றால், குழியில் விழுந்து வேதனைப்படும்!

அதுபோல, ஒவ்வொரு கஷ்டத்திலிருந்தும் நாம் மீள வேண்டுமானால், விழிப்போடு செல்ல வேண்டும் — இல்லாவிட்டால் வேதனையால் தாக்குண்டு அல்லல்பட்டுத்தான் தீர வேண்டும்.

அல்லல்கள் அகலும் மார்க்கங்களைக் கூறவேண்டியதற்குப் பதில், அதற்கொரு திரையிட்டு, 'விதி' என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

விதி என்ற சொல்லை வீசி வீணர்களாக மக்கள் வாழ வேண்டும் என்று எண்ணுவது சரியா?

"உலகம் மாயை, காயம் பொய், இவைகளை உண்மை என்று நம்பாதே! மண், பொன், பெண் ஆகிய ஆசைகளை அறவே விட்டொழி! மற்ற உயிர்களை வதைத்து, உன் உடலை வளர்த்துக்கொள்ளாதே! எறும்பு முதலிய எண்பத்து நான்கு லட்சத்து நூறாயிர உயிர்களும் ஆண்டவன் படைப்பு—அவைகளுக்கு மனத்தாலும் துன்பம் செய்யாதே! புலன்களை அடக்கு; புண்ணிய வழியில் செல்" என்று, மதகுரு பக்தர்களுக்கு உபதேசித்து பரவசத்திலாழ்த்தி விட்டு, வெள்ளி டம்ளரிலே அரைபடியை கால்படியாகக் காய்ச்சிய பாலை ஊற்றிக் குடித்து விட்டு, யானை, குதிரை, ஒட்டகம் சகிதமாக பல்லக்கேறி சவாரி சென்றால் — அது அவன் விதி என்று கூறி, பேச்சுக்கும் செயலுக்கும் பெருத்த வித்தியாச முள்ள வினைகளை வளர்க்க வேண்டும் என்று எண்ணுந்தானே, விதியை வற்புறுத்துவது.

விஞ்ஞானத்தில் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டிலேயும் விதி என்ற திரையையிட்டு முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவது விவேகமாகுமா என்று கேட்கிறோம்.

ஒருவன் மாடமாளிகையில், மந்தகாசமாக வாழ்வதும், மற்றொருவன் மண் புழுதியிலே மங்கி மடிவதும், பாடுபடுபவன் பதைத்து வாழ்வதும், பாடுபடாதவன் பணங் குவித்து அல்லல் படாது வாழ்வதும் ஏன் என்று கேட்பவர்களுக்கு, விதி என்ற வெற்றுச் சொல்லை வீசி வீணர்கள் வாழ வழி வகுக்கும் பாதகச் செயலை, இந்த இருபதாம் நூற்றாண்டிலேயும் வளர்க்கப் பாடுபடுவது பெருஞ் சதியாகும்.

முயற்சியால் முன்னேற்றமடைந்திருந்த தமிழ் நாடு, இந்த 'விதி' என்ற சொல்லாலேயே— என் செயலால் ஆவது ஒன்றுமில்லை—இனித் தெய்வமே உன் செயலே என்று உணரப் பெற்றேன்' என்ற நிலைக்குச் சென்றதாலேயே — அதனை நம்பியதாலேயே இன்று, குடும்பம் குடும்பமாக தமிழர்கள் வீதியிலே உலவும் வேதனையான காட்சி நிலவ ஆரம்பித்துள்ளது.

இந்த அவல நிலையினைக் கண்டும், அதை ஒழிக்கும் பணியிலே ஈடுபடாது, நம்மால் ஒன்றுமில்லை, விதி வலிது என்று பேசுவதும் எழுதுவதும் வடிகட்டின துரோகத்தனமல்லவா?

விதிவலிது!—அது விடுமா?—என்று தீட்டியுள்ள தினமணி, அதே தேதியில் அதே பக்கத்தில்:

"திருப்பத்தூர் தாலுக்காவைச் சேர்ந்த வாணியம்பாடிக் கிராமவாசியான ராஜமாணிக்கம் என்பவர் 1952ம் வருஷம் ஆகஸ்ட் 22ல் வேறொரு கிராமவாசியைக் குத்திக் கொலை செய்த குற்றத்துக்காக நீதிபதியால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டார். அவர் 1953ம் ஆகஸ்ட் 5-ல் வேலூர் மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டார்"

என்ற செய்தியை வெளியிட்டிருக்கிறது.

விதியால் யாவும் நடைபெறும் என்று எண்ணினால், விதி, ராஜமாணிக்கத்தைக் குத்தச் செய்தது. எனவே, விதியின் விளைவே ஒழிய ராஜமாணிக்கத்தின் மீது குற்றமில்லை என்று கூறலாமல்லவா. அப்படியில்லாமல், கொலை செய்தவரென்று தண்டிக்கப்பட்டாரல்லவா?

அதுபோலவே, கிணற்றுக்குச் சுற்றுச் சுவர் இல்லாததும், குழந்தையை அஜாக்கிரதையாக விட்டதும் தவறு என்று எடுத்துக்காட்டாமல், விதி என்ற சொல்லை வலிந்து கொண்டுவந்து பொருத்துவது மதி பெற்றவர் செயலாகுமோ என்று கேட்கிறோம்.

விதி என்ற சொல்லை மறந்து, வேதனைப்படுவோர், எங்கு வேதனைக்குக் காரணத்தை அறியும் வழியைக் கண்டுகொண்டு, விழிப்பு நிலை பெற்றுவிடுவரோ என்பதற்காகவே, விதி என்ற சொல், விதி என்ற சதித்திட்டம்—வீணர்கள் சிலரால் புகுத்தப்பட்டது — இன்னும் வளர்க்கப் படுகிறது.

விதியால் யாவும் நடைபெறும் என்று பேசும் எழுதும் 'விவேகிகள்' விதியின்படி நடக்கும் என்று எதையும் விட்டுவிடுவதில்லை—வேதனையைக் களையும் வழியை ஒழிக்கப் பாடுபடாமல் இருந்ததில்லை.

என்றாலும், விதியை மற்றவர்களுக்குத் திணிக்கிறார்கள்—திணிக்கப் பாடுபடுகிறார்கள்.

இந்த வீண் வேலையை மேற்கொள்வது விவேகமாகாது. மற்றவர்களை முன்னேறவொட்டாத பாதையில் தாழ்த்தும் மாபாதகச் செயலைச் செய்வது மனிதத் தன்மைக்குப் புறம்பானது.

விதிதான் வலிது என்றால், விவேகிகளுக்கும் விற்பன்னர்களுக்கும் இங்கு இடமேது?

விதிதான் வலிது என்றால், மதி படைத்த மக்களே நாட்டில் நடமாடக்கூடாது என்றுதானே பொருள்.

விதியை வலியுறுத்த நினைப்பது, வீணர்களை பெருக்கவைக்கத்தானே! அதனால் எத்தர்கள் வாழத்தானே!

விதியின்படி நடக்கட்டும் என்று காந்தியார் சாந்தியைத் தேடிக் கொண்டிருந்திருந்தால், இந்தியா விடுதலை பெற்ற நாடாகத் திகழுமா?

எனவே, இதுபோன்ற வழிகளை வகுக்க முனைவதும் — மூளையைச் செலவிடுவதும் முறையாகாதென்பதைத் தவிர, இப்படிப்பட்ட எத்தர்களுக்குவேறு என்னதான் சொல்லமுடியும்!

மறுப்பு

புதுக் கல்வித்திட்டத்தைப்பற்றி சட்டசபையில் 29-7-53 அன்று நான் பேசியதாகத் தவறான ஒரு செய்தியை 31—7—53 "தினத்தந்தி வெளியிட்டிருக்கிறது. இதைக் கண்ட நாடார் சமூகத்தார் ஆத்திரமடைந்திருப்பதைக் கண்டு வருந்துகிறேன்—மறுக்கிறேன். உண்மை தெரிந்தால் ஆத்திரமடைவதற்கு இடமிருக்காதென நம்புகிறேன்.

31—7—53-ந் தேதி மாலை மதுரை தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் இதுகுறித்துக் கேட்ட கேள்விகளுக்கு தோழர்கள் நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன் ஆகிய மூன்று தலைவர்களும் மறுப்புரைத்தும், நெடுஞ்செழியன் சட்டசபையில் நான் பேசியதை நேரில் எடுத்துரைத்தும்கூட நாடார் மஹாஜன சங்கச் செயலாளர் எனக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் அதில் நான் சட்டசபையில் விஷமப் பிரச்சாரம் செய்ததாகவும் அதை நான் வாபஸ் வாங்க வேண்டுமென்றும் 6—8—53 சென்னை காலைப்பதிப்பு 'தினமணி' பத்திரிகையில் படித்தேன். நாடார் மஹாஜன சங்க செயலாளர் எழுதிய கடிதம் எனக்கு வந்து சேரவில்லை. அவர் எழுதியபடி நான் விஷமப் பிரச்சாரம் செய்யவுமில்லை. அதனால் வாபஸ் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை. கீழ்க்காணும் விளக்கமே அந்த விபரீத நினைவுகளைப் போக்கும் சான்றாகும்:—

தூத்துக்குடி புதுக் கிராமத்தில் புகுந்து கொள்ளையடித்து ரௌடித்தனம் செய்தவர் நாடார்களென்று நான் சொன்னதாக "மதுரை தினத்தந்தி" வெளியிட்டிருக்கிறது. என் சட்டசபைப் பேச்சில் நாடார்கள் பற்றி ஒரு வார்த்தையும் கிடையாது. நான் சொன்னதெல்லாம் போலீஸ் அதிகாரி டெபுடி சூப்ரண்டெண்ட் முதலியோர்கள் "புதுக் கிராமத்தில் நடைபெற்ற செயலுக்கும் தி. மு. கழகத்துக்கும் சம்மந்தமில்லை" என்று கூறியிருக்கிறார் என்பதுதானே தவிர, மதுரை தினத்தந்தி வெளியிட்டிருப்பதைப் போல் கொள்ளையடித்தல் ரௌடித்தனம், அட்டகாசம் செய்தல் என்ற வார்த்தை குறிப்பிடவில்லை. போலீஸ் அதிகாரி சாட்சியத்திலிருந்து தி. மு. கழகத்திற்கும் புதுக் கிராம சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றுதான் கூறினேன்.

எனக்கும் நாடார் சமூகத்திற்கும் எவ்வித விரோதமும் கிடையாது. பிராமணர்களுக்கும் நாடார்களுக்கும் விரோத மூட்டவேண்டுமென்ற கெட்ட நோக்கத்தோடு நான் சட்டசபையில் பேசியதாகக் கூறுவது தவறு.

சட்டசபையில் அரசியலார் எடுக்கும் குறிப்பில் என் சொற்பொழிவில் இச்செய்திகள் கிடையாது. மதுரை தினத்தந்தியில் மட்டும் எப்படி வந்தது என்பது எனக்கு ஆச்சர்யத்தையும் வருத்தத்தையும் தருகிறது.

இந்த மறுப்புச்செய்தியைப் படிக்கும் நாடார் பெருங்குடி மக்கள் என்னைப்பற்றித் தவறாக நினைத்ததை மாற்றிக் கொள்வார்களென நம்புகிறேன்.

ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.